Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 23 (18.11.2003) செவ்வாய்க்கிழமை இதழ்:49

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

புல்மைப்பரிசில் திட்டம் 2004 ற்கான விண்ணப்ப முடிவு திகதி அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க **30.11.2003** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் தமிழ் நாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## சமாதானப் பேச்சுக்களின் பெயரால் நாட்டின் பாதுகாப்பு சீரழிகின்றதாம்!

### ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

நோர்வேயினாலும், விடுதலைப் புலிகளாலும் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளின்மூலம் நாட்டின் பாதுகாப்பு பாதிப்படைந்து செல்வதை அனுமதிக்கப்போவதில்லை என, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டி நகரில், போரினால் கொல்லப்பட்ட, ஊனமுற்ற படையினரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

நாட்டின் சகல இன மக்களது உரிமைகளைப் பாதுகாப்பது முக்கிய கடமையாகும். சமாதான முயற்சி (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சி இடைநிறுத்தப்பட்டதால் ரோக்கியோ நிதியுதவி தடைப்படும் ஆபத்து!

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டுவருவதற்காக நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளதால், ரோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவி கிடைக்காமல்போகும்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றிய போது மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, நாட்டின் அரசியலில் நெருக்கடிநிலை ஏற்பட்டது. இந்த அமைச்சுக்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசியல் நிலை குறித்து

# நோர்வே சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் இந்திய வெளியுறவு அதிகாரிகளுடன் ஆராய்வு!



நேற்று, இந்தியாவுக்கு விஜயம் செய்த எரிக் சொல்ஹெய்ம் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய

(புதுடெல்கி)

**இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகள் குறித்தும், அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களின் நிலை குறித்தும் - நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நேற்று இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.**

பின்னர் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்தார். அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்ததாவது,

டெல்கிக்குச் சென்று இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெறுவது எப்போதுமே பயனுள்ள விடயம்தான். இப்போது அதுபோல பயனுள்ள ஆலோசனையை நடத்தியிருக்கிறேன். இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளைச் சந்தித்தேன். வெளியுறவுத்துறை செயலரையும் சந்தித்தேன். எவ்வளவு வெளிப்படையாகப் பேசமுடியுமோ அவ்வளவு வெளிப்படையாகப் பேசினோம். இலங்கை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக்கு சென்றவரைக் காணவில்லை

கொழும்புக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காணாமற்போயுள்ளதாக அவரது மனைவி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொக்குவில் சபாபதி லேனைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பொன்னுத்துரை சரவணபவன் (வயது 48) என்பவரே காணாமற்போயுள்ளார்.

இந்த மாதம் முதலாம் திகதி முதல் இவர் காணாமற்போயுள்ளதாக பொலிஸ்நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெல்லிப்பளை வைத்தியசாலைக்குச் சென்ற மாவை படையினரால் திருப்பி அனுப்பப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் நிலைமைகளை நேரில் பார்வையிடச் சென்ற கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா படையினரால் திருப்பியனுப்பப்பட்டார்.

நேற்றுக்காலை வைத்தியசாலை நிலைமைகளை நேரில் பார்வையிடச் சென்ற இவரை, தெல்லிப்பளையில் அமைந்துள்ள பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்கக் காவல் நிலையத்தில் வழிமறிக்கப்பட்டு, தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் தான் என்பதை அடையாளம் காட்டியபோதும், அங்கு செல்ல அனுமதிக்கப்படாமை குறித்து, ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## இந்திய இராணுவம் உஷார் நிலை; சுப்பிரமணியம் சுவாமி வரவேற்பு!

## ஜே.வி.பியுடன் கூட்டு அமைக்காவிட்டால்

# இந்திய இராணுவம் உஷார் நிலை; சுப்பிரமணியம் சுவாமி வரவேற்பு!

(புதுடெல்கி)

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு இராணுவ ரீதியில் இந்தியா தலையிடவேண்டுமெனில், முன்நிபந்தனைகளின் அடிப்படைகளிலேயே தலையிடவேண்டும்.

இவ்வாறு ஜனதா கட்சியின் தலைவரான சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் நெருக்கடி நிலையையடுத்து, இந்திய இராணுவத்தை உஷார் நிலையில் வைத்திருக்க, பிரதி இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சந்தனு சௌத்ரி எடுத்த முடிவையும் சுவாமி வரவேற்றுள்ளார். இலங்கையின் பிரச்சினைத் தீர்வுக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியுடன் கூட்டு அமைக்காவிட்டால் பொ.ஐ.முன்னணியிலிருந்து விலகுவேன்!

## எச்சரிக்கிறார் அநுரா பண்டாரநாயக்க

பொதுஜன ஐக்கிய முன்னணியினால் ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தமுடியாது போனால் - பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து விலகப்போவதாக, பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின ஆலோசகருமான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அவரது றோஸ்மிட் இல்லத்தில் கட்சி அங்கத்தவர்களுடான சந்திப்பின்போதே அநுரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

இரு கட்சிகளுக்குமிடையிலான இணைப்புக் குறித்து- இருகட்சிகளின (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில்

# படை வாகனங்களால் ஏற்பட்ட விபத்துக்கள்; விசாரணை அறிக்கை தளபதி பலகல்லவிடம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலங்களில் பொதுமக்கள் மீது படையினரின் வாகனங்கள் மோதிய சம்பவங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கென அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் விசாரணைகள் பூர்த்தியடைந்து, இதுதொடர்பான அறிக்கை நேற்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவிடம் கையளிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக படையினரின் வாகனங்கள் பொதுமக்கள் மீது மோதும் சம்பவங்கள் அதிகரித்த காரணத்தால் - பொது அமைப்புக்களும், மனித உரிமை ஆணைக்குழுவும் கடுமையான எதிர்ப்பை இதற்குக் காட்டியிருந்தன. இந்த எதிர்ப்பினையடுத்தே இராணுவத் தளபதியால் இந்த உயர்மட்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டது.

கடந்த மூன்று மாதங்களில் மட்டும் இருபது இராணுவ வாகன விபத்துக்கள் நடைபெற்றன. இதில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயத்திற்குள்ளாகி இருந்தமையும் தெரிந்ததே.



நாளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ள வரவு -செலவுத்திட்ட அறிக்கையை பெட்டகத்தில் வைக்கிறார் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

## சாவகச்சேரி – நகரசபை

# மீள் கேள்வி அறிவித்தல்

01.01.2004 ஆம் திகதி முதல் 31.12.2004 வரையான காலப்பகுதியில் கீழ் குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.
கேள்விப் பத்திரங்கள் வழங்கும் இறுதித் திகதி 28.11.2003 நண்பகல் 12.00 மணிவரை.
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 01.12.2003 முற்பகல் 10.00 மணிவரை ஆகும்.
கேள்விகள் 01.12.2003 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

| விபரம் | கடை இல | கேள்விவைப்பு (ரூ) | படிவக் கட்டணம் (ரூ) பெறுமதி சேர்வரி 20% | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| ஆட்டிறைச்சிக்கடை | என் எம் எஸ் 1 | 1000/= | 200/= | 100 000/= |
| மாட்டிறைச்சிக்கடை | என் எம் எஸ் 3 | 1000/= | 200/= | 100 000/= |

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
17.11.2003

மு.செ.சரவணபவ
செயலாளர்,
நகரசபை - சாவகச்சேரி

(சி-1810)

# ஒன்றரை வயதுக் குழந்தை கிணற்றில் வீழ்ந்து மரணம்!

(யாழ்ப்பாணம்)

கிணற்றுள் தவறிவீழ்ந்து ஒன்றரை வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது. இச்சம்பவம் ஆனைக்கோட்டை சிவன்கோவிலடியில் நேற்று இடமபெற்றது.

இராசலிங்கம் வைஸ்ணவன் என்ற குழந்தையே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தது.

பெற்றோர் இருவரும் வேலைக்குச் சென்றுவிட, உறவினர் ஒருவரின் கண்காணிப்பில் இருந்த இக்குழந்தை - கிணற்றடியில் விளையாடிக்கொண்டிருந்தவேளை தவறி வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட குழந்தையின் சடலம் மரண விசாரணைகளின் பின்னர் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. (ச)

## சாவற்காட்டில் வசிக்கும்

# 80 விதவைகளுக்கு பின்லாந்து அரசு உதவி

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பின்லாந்துத் தூதரகத்தின் ஏற்பாட்டில் சாவற்கட்டைச் சேர்ந்த 80 விதவைகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் இயங்கிவரும் 'தாரகா' சேவை நிலையத்தின் செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலயே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முதல் இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தற்போது விதவைகளின் குடும்ப அங்கத்தவர்கள் 200 பேரும் பயன்பெறக்கூடிய வகையில் சுய தொழில்முயற்சி, கல்விவாய்ப்பு, கலாசாரக் கட்டமைப்புத் தடையிலிருந்து பெண்களை விடுவிக்கக் கூடிய வழிமுறைகளை ஆராய்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இதனை நடைமுறைப்படுத்தவென சாந்தியகத்தைச் சேர்ந்த ஐந்து வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான முழுஉதவியையும் பின்லாந்து அரசாங்கம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். (ப)


உங்கள் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு
எமது வாழ்த்துக்கள்
ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் இலங்கை (வரை)
அப்பலோ வைத்தியசாலை,
வைத்திய நிபுணர்களின்
இலவச மருத்துவ பரிசோதனை
☞ 22.11.2003 (சனி)
☞ 23.11.2003 (ஞாயிறு)
Life Insurance Corporation Lanka (Ltd)
55, R.G கட்டடம்
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-1809)

ராஜா யாழ்ப்பாணம்.
விக்ரம், சூர்யா, லைலா நடித்த
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
இரவு 9.30 மட்டும்
AMERICAN BEAUTY
(சி-1751)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று மட்டும்
சரத்குமார், கிரண் நடித்த
திவான்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
AMERICAN BEAUTY
(சி-1752)

எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்




பஜாஜ் - எனது நண்பன்


பஜாஜ் - எனது கைஉதவியாளன்


பஜாஜ் - எனது மூத்தவன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**
அந்த போக்குவரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.


பஜாஜ் - எனது காவலன்

விலை ரூ. 195,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 4700600, பக்ஸ்: 4700677, 2687175 Web Site: http//:www.dpmco.com

பிரதேச கிளை அலுவலகங்கள்: ● 174B,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 082-226146 பக்ஸ்: 082-238134 ● 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027-2250037 பக்ஸ்: 027-2250222 ● 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-2228488 பக்ஸ்: 041-2227488 ● நீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-2222997 பக்ஸ்: 063-2223662 ● 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-2225048/9 பக்ஸ்: 025-2225050 ● தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-2222389 ● இல. 116, குருணாகல் வீதி, புத்தளம். தொ. பே: 032-2267410 பே/பக்ஸ்: 032-2267411 ● பிராந்திய அலுவலகம்: இலக்கம் 72, தரங்காகட்டிடம், பாக் வீதி, நுவரெலியா. 052-2235760/61/62/63 பக்ஸ்: 052-2235764 ● இல. 83, கண்டி வீதி, யக்கல. தொலை பேசி: 4672019 தொலை பேசி/பக்ஸ்: 033-2225522 ● இல.30, ரேஸ்கோஸ் வீதி, பதுளை. தொ. பேசி : 055-2224800/1

Tradlanka Advertising

# இலங்கை உட்பட 20 நாடுகளுக்கு நிதியுதவிகளை பிரிட்டன் நிறுத்தியது

உறுதியளித்த நிதியினை வழங்குவதை, பிரிட்டன் நிறுத்தியதால் இலங்கை உட்பட இருபது நாடுகள் பாதிப்படைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது பிரிட்டன் அரசு - ஈராக்கில் போர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதனாலேயே இந்த நிதி வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த 20 நாடுகளுக்கு வழங்கவென, இருந்த 25 மில்லியன் ஸ்ரேலிங்பவுணை பிரிட்டன் அரசு எடுத்துள்ளது. இதில் இலங்கைக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாத நிலையில், பிரிட்டன் அரசு அந்த நிதியை மீளப் பெற்றமையானது, இலங்கையின் இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் மட்டுமன்றி, 2005ஆம் 2006' ஆம் ஆண்டுக்கான திட்டமிட்ட நிகழ்ச்சி வரைபுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

சர்வதேச அபிவிருத்தி நிதியத்தின் முன்னாள் அதிகாரி ஒருவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்:

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் 6.3 மில்லியன் ஸ்ரேலிங் பவுணை இலங்கைக்கு பிரிட்டன் வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

ஜப்பான் - ரோக்கியோ மாநாட்டில் பிரிட்டன் அரசு 50 மில்லியன் ஸ்ரேலிங்பவுண் வழங்குவதாக ஒப்புக்கொண்டபோதும், அது சமாதான முன்நகர்வைப் பொறுத்தே வழங்கப்படுமெனவும் தெரிவித்தது.

ஈராக் மீதான போரும், அதற்குப் பின் ஏற்பட்ட விளைவுகளாலும், பிரிட்டனுக்கு ஒரு நாளைக்கு ஐந்து மில்லியன் ஸ்ரேலிங்பவுண் செலவாவதாகவும், இது அந்த நாடு எதிர்பார்த்ததைவிட அதிகமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இழுபறி நிலைக்குள்ளாகியிருக்கும் பொலிஸ்மா அதிபர் நியமனம்!

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக, ஜனாதிபதிக்கும், பொலிஸ் ஆணைக் குழுவுக்கும் இடையில் புதிய நெருக்கடி உருவாகி வருகின்றது.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அடுத்த பொலிஸ்மா அதிபர் பதவிக்கு, பிரதிப்பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோவை நியமிக்குமாறு, ஜனாதிபதிக்கு சிபார்சு செய்திருந்தது. சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, பிரதி பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோவின் பெயரை, அரசியலமைப்பு சபைக்கும் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி குமாரதுங்க - பதில் பொலிஸ்மா அதிபராக இந்திர டி சில்வாவை நியமித்திருந்தார்.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு இந்திர டி சில்வாவின் பெயரை ஜனாதிபதியும், அரசியலமைப்பு சபையும் சிபார்சு செய்திருந்தது.

இதேவேளை - பொலிஸ் ஆணைக்குழுவே சந்திரா பெர்ணாண்டோவே இந்த பதவிக்குப் பொருத்தமானவர் என்று தமது சிபார்சை அனுப்பியிருந்ததாகவும், ஜனாதிபதியின் பதிலுக்கு காத்திருப்பதாகவும் அரசியலமைப்புச்சபையின் தலைவர் தெரிவித்தார்.

# நீதிபதிகளின் தவறுகளை கட்டுப்படுத்த நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம்

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதிபதிகள் விடும் தவறுகளைத், திருத்தவும், அவர்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், வெளிநாட்டு சட்டத்துறை நீதியரசர்கள் விசாரிப்பதற்கு ஏற்றவகையில், சட்டத்துறையில் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.

தற்போதைய நடைமுறையின்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவால் நீதிபதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் உள்ளது. இதற்குப் பதிலாகவே மேற்கண்ட சட்டத்திருத்தம் வரவுள்ளது.

இதேவேளை, தகவலறிந்த வட்டாரங்களின்படி பிரதம நீதியரசர் சரத் என்.டி.சில்வாவுக்கு எதிராக, அரசினால் கொண்டுவரப்பட இருந்த குற்றவியல் பிரேரணையை அரசு கைவிட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கு இரு கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்

## சிறுபான்மைக் கட்சிகள் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் மலர இரு பிரதான கட்சிகளும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டுமென, மூன்று கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கம் வகிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசிய முன்னணியும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி ஆகியனவே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தனது கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நடத்திய கலந்துரையாடலொன்றில் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து விடுத்துள்ள வேண்கோள் ஒன்றிலும் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் சமாதான நடவடிக்கைகளிலிருந்து பின்வாங்குவதாக பிரதமர் தெரிவித்திருப்பது, கவலைக்குரிய விடயம், கூட்டுமுயற்சிகள் மூலமே சமாதானத்தை உருவாக்க முடியும், ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் இடையே உருவாகியுள்ள அரசியல் நெருக்கடி ஆபத்தானது,

ஜனாதிபதி கோரும் தேசிய நல்லிணக்க அரசு உருவாக்கப்படுதல் என்பது வரவேற்கத்தக்க ஒன்று, அதற்கு நாம் ஆதரவளிக்கத் தயாராகவுள்ளோம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின்குரல் வானொலிக்கு வழங்கப்பட்ட உபகரணம் அனுமதியுடன் வழங்கப்பட்டதா?

## ஆராயவிருப்பதாக ஊடகத்துறை செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஊடகத்துறை - புலிகளின் வானொலி ஒலிபரப்புக்கென வழங்கப்பட்ட சாதனங்கள், உரிய முறையிலான அனுமதியுடன் வழங்கப்பட்டனவா என்று ஆராயப்படவிருப்பதாக தற்போதய ஊடகத்துறையின் செயலாளர் திலக் ரணவீரராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், [illegible] கி.மீற்றருக்குள்ளேயே ஒலிபரப்பை [illegible]டாத்தவென விடுதலைப்புலிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், தற்போது அவர்களின் ஒலிபரப்புத்தூரம் குறிப்பிட்டதைவிட அதிகமாகவுள்ளது.

இதுதொடர்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளேன், அந்த அறிக்கை கிடைத்ததும் அதனை பாதுகாப்பு அமைச்சிற்கு தெரியப்படுத்துவேன், அதன் பின் என்ன முடிவு எடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

புலிகளுக்கு வானொலிச் சாதனம் 20 கி.மீற்றருக்குள்தான் இயங்குகிறதா என்பதனை அறியக்கூடிய சாதனங்கள், வசதிகள் தங்களிடம் இருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை புலிகள் கேட்டு, உடனடியாகக் கொடுக்கப்பட்டது இந்த ஒலிபரப்பு சாதனங்கள். ஆனால் தலதா மாளிகை அதிகார சபை இதேபோன்று கேட்டும், தேசிய ஐக்கிய முன்னணியின் ஊடகப்பிரிவினர் கவனத்தில் எடுக்கவில்லையெனவும் ரணவீரராஜா மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளில் மனித வளங்களும் முக்கியமானவை

## அமைச்சர் சுரணிமல ராஜபக்ஸ



யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில், சமாதானத்தின் மூலமாக அபிவிருத்திப் பணிகள் செய்வதன்மூலம், யுத்தம் இப்பகுதிகளில் நடைபெறவில்லை என்ற உணர்வை கொண்டுவருவதே, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக இருக்கின்றது. பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளில் கட்டடங்களைப்போல், மனிதவளங்களும் மிகவும் முக்கியமானவை. இவ்வாறு பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஸ தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாடு, விளையாட்டுத்துறை அமைச்சு கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாண வலயக் கல்வி பணிப்பாளர்களையும், பாடசாலை வேலைகள் பகுதிப் பரிசோதகர்கள், பொறியியலாளர்கள், கட்டட ஒப்பந்தகாரர்கள் ஆகியோரைக் கடந்த சனிக்கிழமை சந்தித்து உரையாடினார். இங்கு கூடியிருந்த அதிகாரிகள் மத்தியில் கல்வி அமைச்சர் உரையாற்றுகையில் -

பிள்ளை எந்த நிலையில் பாடசாலைக்குச் சேர்க்கப்பட்டாலும், வெளியேறும்போது, சமூகத்திற்கு ஏற்ற விதமாக மாற்றியமைக்கப்படவேண்டும். இந்த நிலை இன்னமும் இங்கு மாறவில்லை.

சில தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கின்றார்கள். ஆனால், சில தேசிய பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. ஆளணி சரியான முறையில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். கல்வி தனிநபர்களுக்கு உரியதாக இருக்கக்கூடாது.

நாட்டில் 24,014 ஆசிரியர்களும், 1546 அதிபர்களுக்கு தேவை இருக்கின்றது. ஆனால், 19,194 ஆசிரியர்களும், 1392 அதிபர்களும் சேவையில் இருக்கின்றார்கள். அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. தேசிய பாடசாலைகளின் வகுப்பறைகளின் திருத்தங்களை, அடுத்த வருடத்தில் மேற்கொள்வதற்காக 50,000 தொடக்கம் 75,000 ரூபாய்கள் வருட ஆரம்பத்தில் வழங்கப்படவுள்ளது. சில வேளைகளில் மனிதம் வேறு விதமாக பார்க்கப்படுகின்றது. சமயம், மொழி, கலாசாரம், நிறம் என்பவைகளால் மனிதத்தை வேறுபடுத்த முடியாது.

பாடசாலைகளில் அதிபர்கள் சரியான புள்ளி விபரங்களைத் தராமையின் காரணமாகவும், அவற்றினை கோட்டக் கல்வி அதிகாரிகள், வலயக் கல்வி அதிகாரிகள் ஆகியோர் சரியாக கையாளாமை காரணமாகவும், இலவச பாடநூல் விநியோகத்தில் அரசு பாரிய திட்டத்தை எதிர்கொள்கின்றது. இந்த வருட இலவச பாடநூல் விநியோகத்திற்காக 62 கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளது. மாணவர்களின் சரியான எண்ணிக்கை கிடைக்கும் பட்சத்தில், பெரியளவான நட்டத்தை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாகவிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மீண்டும் தேர்தல் ஏற்பட்டால் 650 மில்லியன் ரூபா செலவாகும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

நாட்டில் மீண்டும் தேர்தல் ஒன்று நடைபெறுமாக இருந்தால், அதற்கு 650 மில்லியன் ரூபாய் தேவையென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் செலவு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த 2001 ஆம் ஆண்டு நடாளவிய ரீதியில் நடந்த ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் போன்றவற்றிற்கு சுமார் அறுநூற்று 50 மில்லியன் ரூபா செலவாகியது.

இதற்குப் பொருட்களுக்கான விலை அதிகரிப்பு, பதிப்பகச் செலவு, மற்றும் ஏனைய செலவுகள் அதிகரித்தமை என்பன காரணமாகும்.

ஆனாலும், நாங்கள் தேர்தலுக்கு முகங்கொடுக்கத் தயாராகவுள்ளோம். எனினும், கடந்தமுறை தேர்தல் செலவுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தல் செலவு அதிகமாக இருக்கும். ஏனெனில், கடந்த முறையை விட இந்தமுறை சகல பொருட்களுககுமான விலைகள் மேலும் அதிகரித்திருக்கின்றன. எனவே, தேர்தல் செலவுகள் கடந்த முறையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும்.

தேர்தலுக்கு திகதி அறிவிக்கப்பட்டு பத்து தொடக்கம் பதினேழு நாட்களுக்குள் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும். நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி அறிவிக்கப்பட்டு முதல் ஐந்து வாரத்திலோ அல்லது நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்த திகதி முடிவடையும் நாளிலிருந்து வரும் எட்டு வாரங்களுக்கோ தேர்தல் எதனையும் நடாத்த முடியாது.

தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுமாக இருந்தால், நாங்கள் இந்த வருடத்திற்கான தேர்தல் இடாப்பாளர் பதிவினை, குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ள வேண்டும். ஆனால், கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் எம்மால் விடுவிக்கப்படாத வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் தேர்தலை நடத்த முடியாமல் இருக்கும்.

எனவே, நாம் அப்பகுதிகளிலிருந்து அடிப்படை மனிதஉரிமை வழக்குகளையும்சந்திக்க வேண்டிவருமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# படையினர் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து நடந்துகொள்ள வேண்டும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ள படையினர், போர்நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்று - படைத்துறைப் பேச்சாளர் சுமேத பேரேரா தெரிவித்திருப்பதுடன், தற்போது வடக்கு-கிழக்கில் குறிப்பிடத்தக்களவு அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லையென்றும் கூறியுள்ளார்.

ஆனால், நீண்டகாலத்தின் பின்னர் தமிழர் பகுதிகளிலுள்ள படைத்தளங்களுக்கு, உலங்கு வானூர்திகள் வந்து செல்வதாகவும், படையினர் தொடர் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகவும், வடக்கு-கிழக்குப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மறுபுறத்தில், கிழக்குக் கடற்பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக, கடற்படை வட்டாரங்கள் கூறுகின்றன.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும், இதனால் தமது அன்றாடப் பணிகள் பாதிக்கப்படுவதாகவும், அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

### எயிட்ஸ் நோயின் தாக்கம்

# கணிப்பீட்டின்படி யாழ்ப்பாணம் ஐந்தாவது இடத்தில் உள்ளது

(வண்ணை)

அண்மையில் எடுக்கப்பட்ட தரவுகளின்படி - இலங்கையில் எயிட்ஸ் நோயின் தாக்கம்கூடிய மாவட்டங்களில், ஐந்தாவதாக யாழ்.மாவட்டம் கணிக்கப்பட்டுள்ளதென, யாழ். மாவட்ட பாலியல்நோய்க் கட்டுப்பாட்டுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு.நக்கீரன் தெரிவித்தார்.

இந்தத் தரவுகள் சுகாதார சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எயிட்ஸ் நோயாளிகள் கூடிய மாவட்டமாக கொழும்பு - 101 பேர், கம்பகா 67 பேர், களுத்துறை - 29 பேர், கண்டி - 27 பேர், யாழ்ப்பாணம் - 24 பேர் எனவும், தாக்கம் குறைந்த மாவட்டமாக கிளிநொச்சியில் - ஒருவரும் எயிட்ஸ் நோயாளிகளாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் தங்கியிருந்து, அகதிகளாக மீளத் தாயகம் திரும்புவோர், புலம்பெயர் நாடுகளில் வசித்துவிட்டு தாயகம் திரும்புவோர், கூடியளவில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகி இருப்பதாகவும், சமூகநலனில் அக்கறையுள்ள அமைப்புக்கள், நிறுவனங்கள் உடனடியாக இதில் தலையிட்டு, எயிட்ஸ் விழிப்புணர்வு திட்டங்களை துரித கதியில் முன்னெடுக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (111)

# முன்பள்ளிகளுக்கான விளையாட்டுப் போட்டி

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணிப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அனுசரணையுடன் நிர்வகிக்கப்பட்டுவரும் 3 முன்பள்ளிகளுக்கான விளையாட்டுப்போட்டி - கடந்த வியாழக்கிழமை செம்பியன்பற்று பிலிப்புநேரியார விளையாட்டு மைதானத்தில் - வடமராட்சி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஐ.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், மங்கள விளக்கினை - கிராம அலுவலர் வ.தவராசா, பாடசாலை அதிபர் வே.அம்பலவாணேசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை - வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியறதுறை துணைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றினார். வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் ச.திரவியராசா - புனர்வாழ்வுக் கொடியினை ஏற்றிவைத்தார். முன்பள்ளிகளுக்கான கொடிகளை - அமுதசுரபி, தமிழினி, சென்பிலிப்பு நேரியார் ஆகிய முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் ஏற்றிவைத்தனர்.

இந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (122)

# சேதமுற்ற வீடுகளுக்கு நெடுந்தீவில் கொடுப்பனவு

(நெடுந்தீவு)

இந்த வருட நடுப்பகுதியில் கடும்காற்றுக் காரணமாக - நெடுந்தீவில் பல வீடுகளும், உடமைகளும் சேதமடைந்தன. அதற்கான கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பாகவும், கடந்தவாரம் யாழ்.செயலக புனர்வாழ்வுப்பகுதி அதிகாரி ஒருவர் இங்கு வந்து, சேதங்களை நேரில் பார்வையிட்டு நட்டஈடு வழங்கப்பட வேண்டிய தொகையினை மதிப்பிட்டுச் சென்றுள்ளார்.

கிராம அலுவலர் பிரிவுகள் ஜே-3, ஜே - 4 , ஜே - 5, ஜே - 6 ஆகிய பகுதிகளில் முறையே 7,4,4,6 வீடுகள் பார்வையிடப்பட்டு, கொடுப்பனவுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சேதவிபரங்களைக் கிராம அலுவலகங்கள் ஊடாகப்பெற்று, ஏற்கெனவே நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் யாழ்.புனர்வாழ்வுக் கிளைக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார். அதன் அடிப்படையிலேயே தற்போது செயலக அதிகாரி நேரடியாகவந்து மதிப்பீட்டினை எடுத்துச்சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## சின்னஞ்சிறு செய்திகள்

### நாய் கடிக்கு இலக்காகி சிறுமி காயம்

வேலணை 5 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் புஸ்பநாதன் - சர்மிளா வயது - 08 என்பவர் நாய்க் கடிக்கு இலக்காகி, படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

முற்றத்தில் இரண்டு நாய்கள் சண்டையிட்டுக் கொண்டு நின்றதாகவும், அதனைத் துரத்துவதற்கு அருகில்சென்ற சிறுமியை, அவர்களது வளர்ப்பு நாயே - முகம், கழுத்துப்பகுதி போன்ற இடங்களை கடித்துக் குதறியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைக் கண்டு அதிர்ச்சியுற்ற தாயார் காலை - 7.30 மணியளவில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதித்தார். இந்தச் சிறுமி வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (121)

### தரம் 9 மாணவர்களுக்கான பெறுபேற்று சான்றிதழ் வழங்கல்

தரம் 9 மாணவர்களுக்கான மாகாணக் கல்வித் திணைக்களத்தினால், நடாத்தப்பட்டுவரும் பரீட்சையின் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் வலயக் கல்வி அலவலகங்கள்மூலம், வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் - 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையின் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (122)

### தேசியத் தலைவரின் கையடக்க கலண்டர் அன்பளிப்பு

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 49 ஆவது பிறந்த தினத்தன்று, கையடக்க கலண்டர்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

2004 ஆம் ஆண்டுக்கான இந்தக் கலண்டர் விநியோக நடவடிக்கைகளை - பல்வேறு அமைப்புக்கள் மேற்கொண்டுவருகின்றன. இதில் தேசிய எழுச்சிப்பேரவை, தமிழ் மாணவர் ஒன்றியம், நலன்புரி நிலையங்களின் ஒன்றியம் என, ஒவ்வொரு அமைப்புக்களும் குறிப்பிட்டளவு தொகை கலண்டரை விநியோகிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

### சுகாதார ஊழியர்களுக்கு சீருடைத்துணி

(நுவிண்டில்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை - வைத்திய அதிகாரி பணிமனையிலுள்ள ஊழியர்களுக்கு, இந்த வருடத்திற்கான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளதென ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை 2000 ஆம் ஆண்டிலிருந்து சீருடைத் தையல்கூலி வழங்கப்படவில்லையென்று ஊழியர்கள் விசனம் தெரிவித்தனர். (116)

# வைத்தியசாலையில் குழந்தையை விட்டுச்செல்ல முயன்ற இளம்தாய்

பிரசவித்து மூன்று நாளான தனது பச்சிளம் குழந்தையை, அநாதரவாக வைத்தியசாலையில் கைவிட்டுதலைமறைவாக முயன்ற 16 வயதான இளம்தாய் ஒருவரை, யாழ்.போதனா வைத்தியசாலைப் பாதுகாப்பு ஊழியர்கள் மடக்கிப்பிடித்தனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

குழந்தையின் அருகே தாயாரை காணாத தாதியர்கள் உசாரடைந்து, பாதுகாப்பு ஊழியர்களுக்கு இந்த தகவலைத் தெரிவித்தனர். இதையடுத்து தனது உடமைகளுடன் வீடுசெல்ல முயன்றதாய் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (111)

# கடந்த பதினைந்து நாட்களிலேயே இவ்வருடத்தில் கூடிய மழைவீழ்ச்சி

இந்தவருடம் பெறப்பட்ட மழைவீழ்ச்சியில் - இந்த மாதம் கடந்த பதினைந்து நாட்களிலேயே அதிகளவு மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக - யாழ்.பிராந்திய வளிமண்டல திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்த வருடம் மொத்தமாக 1094.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், நவம்பர் மாதம் மட்டும் 341.3 மி.மீ மழைவீழ்ச்சி பதிவாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்திலேயே மிகக்குறைந்தளவு மழைவீழ்ச்சியாக 9.7 மி.மீ பெறப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை பெறப்பட்ட மழைவீழ்ச்சிகளின் அளவு வருமாறு-

ஜனவரி - 45.33 மி.மீ, பெப்ரவரி - 53.7 மி.மீ, மார்ச் - 47.1 மி.மீ, ஏப்ரல் - 74.7 மி.மீ, மே - 56.8 மி.மீ, யூன் - 71.4 மி.மீ, யூலை - 29.3 மி.மீ, ஒகஸ்ட் - 145.8 மி.மீ, செப்ரெம்பர் - 9.7 மி.மீ, ஒக்ரோபர் - 219.6 மி.மீ, நவம்பர் - 341.3 மி.மீ (நேற்றுவரை).

இந்த வருடத்தில் அதிகூடிய வெப்பநிலை பதிவாகியநாளாக, ஏப்பிரல் மாதம் 25 ஆம், 29 ஆம் திகதிகள் உள்ளன. இந்தத் தினங்களில் 35.4 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கலாவித்தகர் பட்டத்திற்கான பரீட்சை அடுத்தமாத இறுதியில்

கலாவித்தகர் பட்டத்திற்கான பரீட்சை - வட இலங்கை சங்கீதசபையினால் நடாத்தப்படவுள்ளது.

இசைத்துறைக்கும், நடனத்துறைக்குமான ஆசிரியர் தரம் 6 அவைக்காற்று நிகழ்சிக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 23 ஆம் திகதி இசைத்துறைக்கும், 29 ஆம் திகதி நடனத்துறைக்கும் இந்தப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இசைத்துறைக்கு - நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க. பாடசாலையிலும், நடனத்துறைக்கு - கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் நடைபெறவுள்ளது.

இந்தத்துறைகளில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடையும் மாணவர்களுக்கு, கலாவித்தகர் பட்டம் வழங்கப்படவுள்ளது எனவும் வட இலங்கை சங்கீதசபைத் தலைவர் தெரிவித்தார்.

# வலிகாமம்மேற்கு பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள - மாவீரர் நாளை முன்னிட்டு, மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு, வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் நவம்பர் 21 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு சனசமூக நிலையங்களிலும், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான கௌரவிப்பு இடம் பெறும்.

இதனை ஊரக தேசிய எழுச்சிப் பேரவையும், சனசமூக நிலையத்தினரும் மேற்கொள்ளவுள்ளனர்.

மாவீரர் துயிலுமில்லங்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பான பதிவு - வலிகாமம் மேற்கு அரசியற்துறை செயலகத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதில் - கோப்பாய், வன்னியிலுள்ள துயிலுமில்லங்களுக்கு செல்வதற்கான பதிவுகளை, மாவீரர்களின் பெற்றோர்கள் மேற்கொள்ளுமாறு அரசியற்துறையினர் கேட்டுள்ளனர். (91)

# ஐக்கிய நாடுகள் சிறுவர்நிதியம் மூலம் சுப்பிரமணியம் பூங்கா புனரமைப்பு

ஐக்கிய நாடுகள் சிறுவர்நிதியத்தின் நிதியுதவியுடன் - யாழ். சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா - மீண்டும் புதிதாக அமைக்கப்படவுள்ளது இதற்கென, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் - 21.2 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூங்காவைப் புனரமைக்கும் வேலைகள், இந்தமாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் சி. இராமலிங்கம் தெரிவித்துள்ளார். முதற்கட்ட புனரமைப்பு வேலைகளுக்கென, மொத்தத் தொகையின் ஒரு தொகுதி நிதியை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் யாழ்.மாநகரசபைக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போர் நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட விளைவுகளினா லேயே, சுப்பிரமணியம் பூங்கா அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 370 தேசிய அடையாள அட்டைகள் யாழ்.செயலகத்திற்கு வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் 75 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான - 370 தேசிய அடையாள அட்டைகள் நேற்று யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்திருப்பதால், அவற்றைப்பெற்று உரிய மாணவர்களிடம் ஒப்படைக்குமாறு, யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

இந்த முறை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மைகருதியே, இந்த தேசிய அடையாள அட்டைகள் கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் அவற்றைப் பெற்று, உரியர்களிடம் உடனடியாக வழங்குமாறு கேட்கப்படுகின்றனர்.

அதிபர்கள் சமூகமளிக்க முடியாதவிடத்து, அதிபர் சார்பாக உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரங்களுடன் வரும் வேறு ஒரு ஆசிரியரும் இவற்றைப் பெற்றுச்செல்ல முடியும்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் பலர், இந்த முறை தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றிருக்கின்றமை, இந்தப் பரீட்சைகளின் போது இடம்பெறக்கூடிய பல சிரமங்களையும், தவறுகளையும் தவிர்க்கும் எனவும், யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ப)

### பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் றோட்டரிக் கழகத்தினரால் - க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான,

பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு - நாளையும், நாளை மறுதினமும் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (72)

# காணாமல்போன வாகனவரி உரிமத்துக்கு பதிலாக பிரதியொன்று வழங்கப்படவுள்ளது

காணாமல்போன வாகனவரி உரிமத்திற்குப் பதிலாக, பிரதியொன்றை வழங்குவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண போக்குவரத்து ஆணையாளர் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக, ஒரு வருடத்தில் இரு வருமானவரி உரிமங்களை ஒருவர் பெறாதவகையில், அவரிடமிருந்து வருமானவரி உரிமத்தின் நகல் ஒன்றைக் கோரும விண்ணப்பதாரி, தமது வாகனத்துக்கு வழங்கப்பட்ட உரிமம் தொலைந்தது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்ய வேண்டும்.

உறுதிசெய்யப்பட்ட பொலிஸ் முறைப்பாடு, வாகனம் தொடர்பாக செய்த காப்புறுதிப் பத்திரம், வாகனப் பதிவுச் சான்றிதழ், புத்தம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டு, குறித்த வருடத்தில் தொலைந்தது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்த திகதியிலிருந்து டிசம்பர் 31 ஆம் திகதிவரை ஒருவருட காலத்திற்கான கட்டணத்தின் விகிதாசாரப் படியான தொகையினையும் செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆணவங்களை சமர்ப்பிக்குமிடத்து, வாகன வருமான வரியின் பிரதியொன்றை பெறமுடியுமென்பது குறிப்பிடத்தக்கது.(113)

### தொலைக்காட்சி கோபுரம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்று, தனது தொலைத்தொடர்பு கோபுரத்தை யாழ்.வீர சிங்கம் மண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தன்று, இத்தொலைத் தொடர்பு கோபுரம் திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், கொழும்பில் இருந்து ஒளிபரப்பப்படும் இந்த நிறுவன தொலைக்காடசிச் சேவையை, யாழ்ப்பாணத்தில் பார்வையிடக் கூடியதாகவிருக்கும். 24 மணி நேர ஒளிபரப்பு சேவையை இந்த நிறுவனம் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வண்ணத்துப் பூச்சிகள்



சூழலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களால், மொனாக் வண்ணத்துப்பூச்சிகள் - 50 ஆண்டுகளில் தமது குளிர்கால வாழ்விடங்களை இழக்க நேரிடலாம்.

ஒவ்வொரு ஆண்டும் இலையுதிரகாலத்தில், இந்த வண்ணத்துப்பூச்சிகள் - வட அமெரிக்காவில் இருந்து மெக்சிக்கோவில் அமைந்துள்ள காடுகளை நோக்கி, 1000 இற்கு மேற்பட்ட கிலோமீற்றர்களைக் கடந்து பிரயாணம் செய்கின்றன. இந்த வண்ணத்துப்பூச்சிகள், தமது குளிர் காலத்தை அந்த இடத்தில் கழிக்கின்றன. அதிகரித்து வரும் மழை வீழ்ச்சியின் காரணமாக, இவற்றால் அந்தக் காடுகளில் வாழமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. "மொனாக்" வண்ணத்துப்பூச்சிகள் மிகவும் சிக்கலான வாழ்க்கைவட்டத்தைக் கொண்டுள்ளன. வட அமெரிக்காவில் "ரொக்கி" மலைத்தொடரில், கோடை காலத்தில் தமது வாழ்க்கைவட்டத்தைத் தொடங்குகின்றன. பின் மத்திய மெக்சிக்கோவை நோக்கி தமது நீண்டபயணத்தை ஆரம்பிக்கின்றன.

மெக்சிக்கோ மக்கள் தமது இறந்த மூதாதையாளர்களுக்கான கொண்டாட்டங்களில் ஈடுபடும் காலத்தில், இவை அங்கு சென்றடைகின்றன. இதனால், மெக்சிக்கோ மக்கள் - இந்த வண்ணத்துப்பூச்சிகள் தமது மூதாதையாளர்களின் "ஆவி" எனக் கருதுகின்றார்கள்.

இவை அங்குள்ள மரங்களின் அடிப்பாகத்தில் கூட்டம்கூட்டமாக இருப்பதைக் காணமுடியும். ஓரளவு குளிரும், உலர்ந்த நிலையும் இவை வாழ்வதற்கு உகந்ததாக அமைந்துள்ளது. ஆனால், தற்போது சூழல் மாற்றமும், கூடிய மழையும், குளிரும் அவற்றை உறைந்துபோகும் நிலைக்கு மாற்றிவிடுகின்றது.




# பண்டாக்களுக்கு உணவூட்ட ஒரு தொழிற்சாலை




பண்டாக்கள் மூங்கில் குருத்துக்களையே தமது உணவாக உபயோகித்துக்கொள்கின்றன. ஆனால், தற்போது சீனாவில் இவை வாழும் பிரதேசத்தில் மூங்கில்கள் அருகிவருவதால், இந்த இனம் அழிவை நோக்கிச் செல்கின்றன.

மூங்கில் குருத்துக்களை உண்பதன்மூலம், தமக்குத் தேவையான நார்ச்சத்தையும், விற்றமின்களையும் இலகுவில் பெறக்கூடியதாக இருந்தது.

தற்போது தொழிற்சாலை ஒன்றில் இவற்றிக்குத் தேவையான சத்துக்களை வழங்குவதற்கு, மூங்கில் இலை வடிவத்தில் பிஸ்கட்டுக்களை உற்பத்தி செய்யவுள்ளார்கள். மிருகக் காட்சிச்சாலைகளிலுள்ள பண்டாக்கள், மீண்டும் மூங்கில் குருத்துக்களை உண்பதுபோன்ற உணர்வுடன், பிஸ்கட்டுகளை உண்ணத்தொடங்கியுள்ளன. இனப்பெருக்கத்திலும் ஆர்வம் காட்டத்தொடங்கியுள்ளன.

# காகங்கள்




கிழக்கு ஆபிரிக்காவில் காகங்கள் - பரந்த அளவில், அந்நாட்டிலுள்ள சிறிய பறவையினங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை சிறிய பறவையினங்களைக் கொல்லத்தொடங்கியதும், இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்து வந்துள்ளது. இவை எல்லாம் செயற்படுத்தமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு ஆபிரிக்காவில் 1891 ஆம் ஆண்டு, பிரித்தானிய கவர்னர்களினால், காகங்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பாதைகளிலுள்ள வேண்டாத பொருட்களைக் காகங்கள் உண்பதன்மூலம், அவற்றை அகற்றலாம் எனக் கருதப்பட்டு, இறக்குமதி செய்யப்பட்டன.

இவற்றை அழிப்பதற்குப் பாவிக்கப்பட்ட பொறிகள் பல பழுதடைந்தநிலையில், மீண்டும் இவை பெருகத்தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுடுநீர்



குளிர் பிரதேசங்களில், வீட்டின் உட்பாகத்தை சூடாக வைத்திருப்பதற்கு (CENTRAC HEATING SYSTEM) எனப்படும் முறையில், கொதிநீரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து, குழாய் வழியாக வீடுகளுக்கு அனுப்பும்முறை நடைமுறையிலுள்ளது. அப்படிப்பட்ட வசதிகள் இல்லாத இடங்களுக்கு - வீடுகளில் மின்சாரம், அல்லது வாயுக்கள் மூலம் நீரைக் கொதிக்க வைக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது பிரித்தானியாவில் பவர்ஜென் (POWERGEN) எனப்படும் ஸ்தாபனம் - புதியகருவி ஒன்றை விற்பனைக்குத் தயாரித்துள்ளது.

இந்தக் கொதிகலத்தினைச் சமையலறையில் இலகுவில் பொருத்திவிடலாம். இதனுடைய சிலிண்டர்களை - எரிவாயு அடுப்பின்மூலம் சூடாக்கும்போது, சிலிண்டருக்குள் அடைக்கப்பட்டுள்ள நைதரசன் வாயு விரிவடைந்து, சிலிண்டரின் தண்டை கீழ்நோக்கித் தள்ளுகிறது. மேலும் சிலிண்டரைச் சுற்றி குழாயூடாகச் செல்லும் நீரைச் சூடாக்குகின்றது.

சிலிண்டர் ஒரு நிமிடத்திற்கு 1600 முறை மேற்பக்கத்திற்கும், கீழ்பக்கத்திற்கும் நகர்கிறது. இதன்மூலம், மின் உற்பத்தியும் செய்யப்படுகிறது.

தேவைக்கதிகமான மின்னை, வீட்டிற்கு வரும் மின்னுடன் இணைத்துவிடுவதால், மாதாந்த மின்கட்டணத்தில் இருந்து குறைத்துக்கொள்ளவும் முடிகின்றது. மேலும் வீட்டின் உட்புறத்தை சூடாக வைத்திருக்கவும்முடியும்.

# பால் வீதி

சர்வதேசமட்டத்தில் ஒரு குழுவாக இயங்கிய விஞ்ஞானிகள் குழாம் - அண்மையில் ஒரு சிறப்பான பால்வீதி ஒன்றினைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். கனிஸ் என்று அழைக்கப்படுகின்ற இது, சூரியனிலிருந்து ஏறக்குறைய 25,000 ஒளியாண்டுகள் தூரத்தில் காணப்படுகின்றன.

இதேவேளை, சிவப்பு நட்சத்திரங்கள் இந்தப் பால் வீதிக்குள் கலப்பதனால், இந்தப் பால் வீதியின் தனித்துவம் இழக்கப்பட்டிருக்கின்றது.



பூமிக்கு அருகாமையில் காணப்படுகின்ற பால் வீதி, 1994 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட சஜீட்டரியஸ் ஆகும். பால் வீதியில் காணப்படுகின்ற மிகப் பெரிய நட்சத்திரங்கள்- மற்றைய நட்சத்திரங்களின் தோற்றத்தினை மறைக்கின்றன. பொதுவாகச் செந்நிற நட்சத்திரங்கள் - தம்முடைய துல்லியமான வெளிச்சத்தினைப் பரப்பி, செந்நிறக்கதிர்களைத் தோற்றுவிக்கின்றன.

பால் வீதியினை முப்பரிமாணத் தோற்றத்தின்மூலம் பார்க்கும்போது, பால் வீதி ஒரு தட்டுப்போல் தென்படுகின்றது. ஆரம்ப காலத்தில் மிகப் பெரிய பால் வீதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்போது சிறிய பால் வீதிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பால் வீதி - ஒரு வளையம்போல காணப்படுகின்றது. பால் வீதியின் வகைகளைக் கண்டுபிடித்து வருகின்ற இந்தக் காலப்பகுதியில், புதிய வடிவங்கள் பால்வீதியில் கண்டுபிடிக்கப்படுவது ஒரு புதிய பரிமாணம்தான்.

# நிலநடுக்கம்



நில நடுக்கங்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கு, நிலத்தின் அடியில் ஏற்படும் மாற்றங்களைச் செசிஸ்மொகிராபி (SEISMOGRAPHY) எனப்படும் வரைபடங்கள் மூலம், ரிச்ரொ ஸ்கேல் (RICH TER SCALE) எனப்படும் அளவில் கணித்து வந்துள்ளார்கள். ஆனால், பூகம்பங்கள் ஏற்படுவதற்கு முன்னரே, சில பறவைகள் தமது இருப்பிடங்களை மாற்றிக்கொள்வதும், உயரமான மலையுச்சிகளில் வாழ்ந்த சில உயிரினங்கள் - மலையடிவாரங்களை நோக்கி நகர்வதையும் அவதானித்து வந்துள்ளார்கள்.

தற்போது ஆசியாவின் மத்திய பகுதிகளில் அமைந்துள்ள நாடான தஜிகிஸ்தானில், 1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற பூமி அதிர்ச்சியை - வளிமண்டலத்தில் ஏற்படும் அமுக்கம், வெப்பநிலை ஆகியவற்றின் மூலம் கணித்துள்ளார்கள்.

# சந்திரனில் பனிக்கட்டி



அண்மையில் கிடைத்த தகவல்களின் பிரகாரம், சந்திரனில் பனிக்கட்டிகள் படலமாக அமையாது, சிறு சிறு துணிக்கைகளாக அமைந்துள்ளது என, அறியப்பட்டுள்ளது.

ராடர் கருவிகள்மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களின் படி, சந்திரனின் இருண்ட பகுதியில் பனிக்கட்டி - படலமாக இல்லை என்பது தெரிய வந்துள்ளது என, புருஷ் கம்பெல் என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார். சக்தி வாய்ந்த, அதிகதூரம் ஊடுருவக்கூடிய 70 சென்ரி மீற்றர் அலை நீளம் கொண்ட அலைகளை - ராடரில் பாவித்துள்ளார்கள். உண்மையில் பனிக்கட்டிகள் படலமாக அமைந்திருந்தால், திரும்பவும் பூமிக்குத் தெறித்திருக்கவேண்டும். ஆனால், அலைகள் நன்றாகப் பிரதிபலிக்கவில்லை. இதன்மூலம், பனித்துகள்களே அங்கு காணப்பட்டதாக அறியமுடிந்தது.


1998 - 1999 காலப்பகுதியில், சந்திரனில் கனிவள ஆய்வில் ஈடுபட்ட விண்கலம்- சந்திரன்மீது 2 வீதம் துகள்களே இருப்பதாக அறிந்துகொண்டது.

சந்திரனில் பனிக்கட்டி உண்டு என்ற கருத்து விஞ்ஞானிகளிடையே பரபரப்பை உருவாக்கியது. அங்கு செல்ல இருப்பவர்களுக்கு குடிநீரை வழங்கமுடியும் எனவும், நீரில் காணப்படும் ஐதரசன், ஒட்சிசன் ஆகிய மூலகங்கள் ரொக்கட்டுக்குத் தேவையான எரிபொருளைத் தயாரிக்க, மூலப்பொருளாகப் பாவிக்கலாம் என்ற கருத்தும் நிலவியது.

# முகமாற்றம்

இதுவரை உடலின் செயற்படாத உறுப்புக்கு, வேறொருவரின் உறுப்புக்களை பொருத்தும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. தற்போது முகத்தை மாற்றும் சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தீக்காயம் அல்லது வேறு விபத்துக்களில் முகத்தின் தோலும், தசைகளும் சிதைந்தவர்களுக்கு - இறந்தவர்களின் முகத்திலிருந்து தோல், தசை ஆகியவற்றை எடுத்து மாற்றீடு செய்யும் வழிமுறைகளைப் பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் வைத்தியர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

ஆனால், இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள்.



பிளாஸ்டிக் அறுவைச்சகிச்சை செய்யும் வைத்தியர்கள்- ஒரு ஆண்டிற்கு முன் இவற்றின் செயல்முறை சாத்தியங்களைத் தெரிவித்திருந்தார்கள்.

தற்போது அவற்றைச் செயற்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். ஒருவரின் உடற்பாகங்களை - இன்னொருவரின் உடல் ஏற்காதநிலை ஆரம்பத்தில் மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது. இன்று அதற்கான மருந்துகளை கண்டுபிடித்துள்ளார்கள். ஒருவரின் முகத்தை மாற்றும்போது, உளவியல்ரீதியாகவும், தர்மசாஷ்திர (ETHICAL) ரீதியாகவும் பிரச்சினைகள் உருவாகின்றன.

மேலும், ஒருவரின் முகத்தை மாற்றும்போது, அந்த மனிதனின் உளநிலைப் பாதிப்புகளையும் ஆராய்ந்து வருகின்றார்கள்.

# கடும் பாதுகாப்பு

விமானநிலையங்களின் பாதுகாப்பினை அதிகரிக்கவேண்டிய தேவை இருப்பதால், புதிய வகையான கருவிகளைக் கண்டுபிடிக்கவேண்டியநிலை - உலக நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஒஸாமா பின்லேடனுடைய தாக்குதலுக்குப் பிறகு, மில்லியன் கணக்கான ஸ்ரேலிங் பவுண்களைப் பிரிட்டன் அரசாங்கம் விமான நிலையப் பாதுகாப்புக்குச் செலவளித்துக்கொண்டு வருகின்றது. புதிய வகையான கருவிகள் - மனிதனுடைய வெளியுறுப்புக்களை மட்டும் சோதனை செய்யக் கூடியவை அல்ல. உள உறுப்புக்களையும் துல்லியமாக சோதனை செய்யக் கூடியவாறு இருக்கின்றன. விமானநிலையத்தில் கண்ணுக்குத் தெரியாமல் பொருத்தப்பட்ட - எக்ஸ்ரே கருவிகள் மூலம், பயணிகள் நன்கு பரிசோதிக்கப்படுகின்றார்கள். இதனால், ஏற்படுகின்ற பிரச்சினை எதுவெனின் - கமராக்கள் மற்றும் ஸ்கானிங் கருவிகளுடைய துல்லியக்குறைவு சிக்கலைத் தோற்றுவிக்கின்றது. பிளாஸ்டிக் சத்திரசிகிச்சைமூலம், முகத்தினை மாற்றுகின்றவர்களுக்கு எனப் பொருத்தப்பட்டுள்ள புதியவகையான கமராக்கள், அவர்களுடைய உண்மையான முகத்தினைக் காட்டக்கூடியவாறு உள்ளமையால், கிரிமினல்கள் பாடு திண்டாட்டமாக உள்ளது. ஆரம்பத்தில் லண்டனில் மட்டும் பாவிக்கப்பட்ட இந்த வகையான கருவிகள் - தற்போது மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் ஆசிய நாடுகளுக்கும் பரவியிருக்கிறது. இந்த வகையான கருவிகள் பெரும்பாலும் சர்வதேசப் பயங்கரவாதிகள் வயிற்றில் புளியைக் கரைக்கப்போகின்றது என்பது உண்மைதான்.



# திரை விமர்சனம்

## திருமலை



மெக்கானிக் விஜயக்கும், பணக்கார வீட்டு ஜோதிகாவுக்கும் காதல். இதைப் பிடிக்காத ஜோதிகாவின் அப்பா பல தில்லுமுல்லுகள் செய்து, இருவரையும் பிரிக்க நினைக்கிறார். தன் புஜபலத்தினை மட்டுமே நிரூபித்து, ஜோதிகாவைக் கைபிடிக்கிறார் விஜய். இந்த வழக்கமான சோற்றுக்கு, பத்து வகையாறாக்களுடன் கறி சமைத்துப்போட்டிருக்கிறார் இயக்குநர் ரமணா. ரஜனி ஸ்டைலில் சிகரட்டினைச் சட்டைக்குள் இருந்து எடுத்துப் பிடிப்பது. மற்றும் பறந்து பறந்து அடிப்பது போன்ற வேலைகள் எல்லாம் சற்று அதிகம்தான். ஒரு சாதாரண கரம்போட்டுக்காக வில்லன்களைப் புரட்டி எடுப்பது - என்னப்பா படம் இது என்று கூறவைக்கின்றது.

ஜோதிகாவின் முகத்தில் நடிப்பில் முதிர்ச்சி+தளர்ச்சி தெரிகின்றது. விவேக்கின் நகைச்சுவை வாய்க்கவில்லை. ரகுவரன் + கௌசல்யா தம்பதிகள் கச்சிதமான ஜோடி. டீசன்ட் தாதாவான மனோஜ் கே ஜெயன்- தற்போதைய தமிழ் நாட்டு தாதாக்களைக் கண்முன்னே கொண்டுவந்திருக்கிறார். பாடல்கள் மற்றும் இசை அவ்வளவாக எடுபடவில்லை. இது கவிதாலயா படமா என்று கேட்கவைத்திக்கிறது.

திருமலை - கதையில்லாத அடிதடி மட்டும். -சுதர்ஷி-

# புதிய பறவை

உலகிலிருந்து முற்றாகவே இல்லாதுபோகும் நிலையிலிருந்த 'சிரில் பன்ரிங்" (CIRL BUNTINGS) எனப்படும் பறவையினம் - மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.



14 ஆண்டுகளுக்கு இதன் மொத்த எண்ணிக்கை 118 சோடியாக இருந்து, இன்று 700 வரை உயர்ந்துள்ளது.

விவசாயிகள் எடுத்துக்கொண்ட முயற்சியே, இந்தப் பறவைகளைக் காப்பாற்றியுள்ளதாகச் சூழல் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கோடை காலத்தில் இப்பறவை- பூச்சி, புழுக்களில் தமது உணவிற்கு தங்கியுள்ளன. குறிப்பாக, வெட்டுக்கிளிகளை (GRASSHOPPER)- தமது குஞ்சுகளுக்கு உணவூட்டுவதற்குப் பாவிக்கின்றன. மாரிகாலத்தில் விதைகளை உணவாக உட்கொள்கின்றன. வயல்பிரதேசங்களில் - கோடைகாலத்தில் அதிகளவில் பூச்சிகளைப் பிடித்து உண்ணக்கூடியதாகவுள்ளது. அறுவடைக்குப் பின், அதிகளவில் தானியங்களைப் பெறக்கூடியதாகவும் உள்ளது.

தற்போது தோட்டம் செய்யும் முறையில் மாற்றங்கள் உண்டாகிவிட்டன. இயற்கைப் பசளைகளைவிட, செயற்கை உரங்களையே அதிகம் பாவிக்கின்றார்கள். இதனால் பூச்சி, புழுக்கள் அருகிக்கொண்டே செல்கின்றன. மேலும் அறுவடையின்பின், வயல்கள் உடனே உழப்படுகின்றன.


இதனால், இந்தப் பறவைகளுக்குத் தேவையான தானியங்களையும் இவற்றால் பெற்றுக்கொள்ளமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு எவ்வாறு இயற்கையோடு இணைந்து பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளலாம் என ஆலோசனையும், நிதி உதவியும் - சூழலியல் பாதுகாப்பு அமைப்பினால் வழங்கப்பட்டது. இதன்மூலம் மீண்டும் இந்தப் பறவையினம் பெருகுவதற்கு வழி அமைத்துள்ளார்கள்.

# வாரம் ஒரு யோகாசனம்

## பத்ம மயூராசனம்

பத்ம மயூராசனம் செய்யும் விதம் - சமனான தரையில் 6 அடி நீளமான விரிப்பை விரித்து, அதிலிருந்து கால்களை நீட்டி, வலது காலை மடக்கி, இடது தொடையின் மேல் வைத்து, இடது காலை மடக்கி, வலது தொடையின் மேல்வைத்து, நிமிர்ந்து இருக்கவேண்டும் பின்பு கைவிரல்களைச் சேர்த்து, முழங்கால் பக்கம் நோக்கி விரல்கள் இருக்க வேண்டும். முழங்கைகளின்மேல் தொப்புளின் இருபக்கங்களும் பதிந்திருக்க வேண்டும். மெல்ல பின் தட்டுக்களை மேலே எழுப்பவேண்டும். முன்னே எழும்பும்போது, முகங்குப்புற நிலத்தில் அடிக்கப்பார்க்கும், சற்று அவதானமாகச் செய்ய வேண்டும். நேராகப் பார்வை இருக்கவேண்டும் முதல் ஆரம்பத்திற்கு 4 தடவையும், பின்பு 12 தடவைகளும் செய்தல்வேண்டும்.



## நன்மைகள்

இந்த ஆசனத்தால் குதிவாதம். முட்டிவாதம், ஏறுகுடல், இறங்குகுடல், சிறுகுடல் என்பன சீராகச்செயற்படும். மலச்சிக்கல் தணிந்துபோகும். வாய்வுத்தொல்லைகள் நீங்கும். மூலவியாதி, நீரிழிவு வியாதிகள் என்பன குறைவடையும். நித்திரை உள்ளவர்களுக்கு நித்திரையைக் குறைக்கும். நித்திரை இல்லாதவர்களுக்கு நித்திரையைக் கொடுக்கும் போன்ற வியாதிகளை நீக்குவதற்கு - இந்த ஆசனம் ஓர் அருமருந்தாகும்.

*தருபவர் - மா.மகாநேசன்.*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது.
-திருக்குறள்.

## நமது நோக்கு

### இந்தியா என்ன செய்யப் போகிறது?

1987 ஆம் ஆண்டு ஜுலை இறுதிப்பகுதியில் இருந்து, 1990 மார்ச் வரையிலான காலப்பகுதியை தமிழ்மக்கள் எவரும் மறந்துவிட முடியாது.

இந்தியப்படை, அமைதிகாக்கும் பணி என்ற பெயரில் தமிழ்மக்கள் வாழும் வடக்கு-கிழக்கு பிரதேசத்தை ஆக்கிரமித்து நிலைகொண்டிருந்த இருண்ட காலப் பகுதி இதுவாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சித் சதிப்பொறியான இலங்கை இந்திய உடன்பாடு என்ற அரசியல் மூலோபாயத்தினுள் சிக்கிய ராஜீவ் காந்தி இலக்குத்தவறிய நடவடிக்கை ஒன்றினை தமிழர்கள் வாழும் பகுதிகளில் இந்திய இராணுவ இயந்திரத்தைப் பயன்படுத்தி மேற்கொண்டதன் மூலம் தனது அரசியல் முதிர்ச்சியின்மையைப் பகிரங்கப்படுத்திக் கொண்டார்.

அப்போது அவர் கையாண்ட அரசியல் தந்திரோபாயம் தமிழ்மக்களின் கடும் எதிர்ப்பையும், வெறுப்பையும் சம்பாதித்துக்கொண்டதுடன், தென்பகுதிச் சிங்கள மக்களின் ஆதரவையும் கூடப்பெறவில்லை.

ஜே.ஆரின் நரித்தன அரசியல் சதி, இந்தியாவுக்கு என்றுமே மறக்கமுடியாத வரலாற்றுத் தோல்வியையும், அவமானத்தையும் ஏற்படுத்தியது.

இந்தியாவின் அப்போதைய இலங்கை இனப்பிரச்சினையூடான உள்நுழைவின்போது, இந்தியாவை அதீத நம்பிக்கையுடன் வரவேற்றது தமிழ்மக்கள் மட்டுமே. இறுதியில் பிரேமதாஸா ஆட்சியின்போது, அவமதிப்புடன் வெளியேற பணிக்கப்பட்டபோது, இந்தியாவுக்கு கையசைத்து வழியனுப்ப அவர்களின் கைக்கூலிகளாக இயங்கிய குழுக்கள்கூட திருகோணமலையில் இருக்கவில்லை. அவர்கள் அதற்கு முன்னரே இந்தியாவுக்குப் பறந்து போய் விட்டார்கள்.

அன்று முதல் இன்றுவரை இந்தியா இலங்கை விவகாரங்களில் ஒட்டமுடியாமலும், ஒதுங்க முடியாமலும், எந்த முடிவும் எடுக்க முடியாது திணறிக்கொண்டிருப்பதும் வெளிப்படையான விடயமாகும்.

ஆனால், இன்றும்கூட இந்தியா குறித்த தமது வரலாற்று உறவுகளைத் தமிழ்மக்கள் தமது ஆழ்மனதில் கௌரவிக்கவே செய்கிறார்கள்.

அதற்காக இந்தியா தனது தேசிய, அரசியல் அபிலாஷைகளுக்கும் பிராந்திய அரசியல் ஆதிக்க நலனுக்கும் ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளையும், உணர்வுகளையும் பலிக்கடாவாக்க நினைப்பதை அவர்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடிந்ததும் கிடையாது.

எண்பதுகளின் இறுதியில், இந்தியா இலங்கையில் கற்ற பாடத்தின் அனுபவ உணர்வை மதிப்பீடு செய்து, தமது வரலாற்றுத்தவறின் காரணிகளை பகுப்பாய்வு செய்து, இலங்கை தொடர்பான தனது கருத்தியல் கோட்பாட்டை, அரசியல் கொள்கையை மீள்பார்வை செய்து கொண்டதா என்பது தெளிவில்லை. அப்படித்தெளிந்து கொண்டாலும் கூட இந்தியக் கொள்கை வகுப்பாளர்களினதும், புலனாய்வு அமைப்புகளினதும் வரட்டுக்கௌரவம் இந்தியா நியாயமான முறையில் இலங்கை இனப்பிரச்சினையில் தனது அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள அனுமதிக்கவில்லை என்பதையே உணரக் கூடியதாக உள்ளது.

இதனை இந்தியாவின் அண்மைக்கால அணுகுமுறைகள் தெளிவுபடுத்துகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நோர்வே அரசின் ஆரம்பகால முயற்சிகளுக்கு இந்தியா மனப்பூர்வமான ஒத்துழைப்பு தரமுன்வரவில்லை.

ஆனால், தமிழ்மக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்தியாவின் பங்களிப்பை வரவேற்றிருந்தார்கள்.

இப்போது இலங்கை விவகாரத்தினுள் மேற்குலக சக்திகள் தமது ஆதிக்கத்தைத் தருணம் பார்த்து விஸ்தரித்துக்கொண்டபோதுதான் இந்தியா விழித்துக்கொண்டது.

ஒருகாலத்தில் இந்தியாவைக் குற்றஞ்சுமத்தி புறக்கணித்த பேரினவாத சக்திகள் இப்போது சமாதானத்தைச் சிதைக்கவேண்டுமென்ற வெறியின் உச்சத்தில் இந்தியத் தலையீட்டை வரவேற்கிறார்கள். சரியான தருணம் இதுதான் வந்துசேருங்கள் எனச் செங்கம்பளம் விரிக்கத் தயாராகிறார்கள்.

இந்திய உதவியின் மகத்துவம் குறித்து வாயாரப் புகழ்கிறார்கள்.

இந்தியாதான் இலங்கையை ரட்சிக்கவேண்டும் என்கிறார்கள்.

இந்தியா இந்த இரண்டாவது மரண அழைப்பை எவ்வாறு கணிப்பீடு செய்துகொள்ளப்போகிறது?

முதல் அழைப்பு ஜே.ஆரினுடையது. அது தமிழர்களுடன் மோதலை உண்டாக்கும் பொறியாக அமைந்தது.

இப்போது சந்திரிகா தரப்பின் அழைப்பு வெளியாகியுள்ளது.


இதனை தமிழர்களுக்கு மீண்டும் கிலியை ஏற்படுத்தவும், மேற்குலகிற்கும், இந்தியாவுக்கும் இடையே ஒரு பனிப்போரைத் தொடக்கி சமாதான முயற்சிகளை நிரந்தரமாக முடக்குவதற்குமான பொறியாக அமைக்க வியூகமிடப்பட்டுள்ளது.

இதை இந்தியா புரிந்துகொள்ளுமா?

அல்லது மீண்டும் வரலாற்றுத் தவறுக்கும், அவமானத்திற்கும் தன்னை ஆளாக்கிக்கொள்ளுமா?

இந்தியா தான் தீர்மானிக்கவேண்டும்.

## நாடும் நடப்பும்



# தேசிய அரசு குறித்த யோசனைகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முற்றுப்புள்ளி?

பிரதமரும், ஜனாதிபதியும் மீண்டும் பேச்சு நடாத்தும்போது, தேசிய அரசாங்கம் குறித்த யோசனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்து, ஜனாதிபதி பிரதமருடன் பேச்சு நடத்தியுள்ள போதிலும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகளான - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், போன்றன இதற்கு ஆதரவு வழங்கமாட்டாதென தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய அரசாங்கம் அமைக்கப்படுமானால், அதில் சிறுபான்மையினருக்கு உரிய அந்தஸ்து இல்லாதுபோகும் என்றும், உரிய இடம் கிடைக்காது எனவும் இக்கட்சிகள் கருதுகின்றன.

கடந்த வியாழக்கிழமை - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் தலைவர்களை சந்தித்துப் பேசிய பிரதமர்-

இந்த விடயம் குறித்து, இந்த 3 கட்சிகளும்கூடி ஆராய்ந்து, அறிக்கையொன்றினை தனக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார்.

தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பான ஜனாதிபதியின் யோசனை குறித்து, இந்த 3 கட்சிகளின் தலைவர்களும் இன்று மாலைகூடி ஆராய்ந்து, பிரதமருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை, இன்று அல்லது வியாழக்கிழமை ஜனாதிபதியை பிரதமர் மீண்டும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, தனது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 3 கட்சிகளினது தலைவர்கள் தயாரித்த அறிக்கையினையும் பிரதமர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

# படைத்துறை அமைச்சுக்கு நிதிவழங்க திறைசேரி மறுப்பு

(கொழும்பு)

படைத்துறை அமைச்சுக்கு தேவையான எரிபொருளை வாங்குவதற்குரிய நிதியை வழங்குமாறு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் விடுத்த வேண்டுகோளை, திறைசேரி நிராகரித்திருக்கின்றது.

நிதி தொடர்பான கோரிக்கையை விடுக்கும்போது, அது தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென, திறைசேரியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி தொடர்பான கோரிக்கைகள் பல தடவைகள் விடுக்கப்பட்டபோதும், அது தொடர்பாகச் சாதகமாகப் பதிலளிக்க திறைசேரி மறுத்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

எதிர்காலத்தில் படைத்துறை அமைச்சின் கோரிக்கைக்கு அமைய தேவையான நிதியை வழங்க முடியாதநிலைமை ஏற்பட்டிருப்பதாகவும், திறைசேரி தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்புணர்வுடன் செயற்படுகின்றனர்

## ஜனாதிபதி பாராட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் பொறுப்புணர்வுடன் செயற்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாராட்டியுள்ளார். இலண்டனிலிருந்து வெளிவரும் பினான்சியஸ் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின்போதே, இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை நேற்று முன்தினம் வெளியிட்டிருந்த இப்பேட்டியில் விடுதலைப் புலிகளை ஜனாதிபதி ஒரு மென்மையான நோக்கோடு அணுகியுள்ளார்.

விடுதலைப் புலிகள் சற்று மாறிவிட்டதாகவும், இவர்கள் கொலைகள் செய்வதை நிறுத்தி விட்டதாகவும் இப்பேட்டியில் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே தற்காலிகமாக வெளியேறியதை அடுத்து, ஜனாதிபதி .மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், விடுதலைப் புலிகளை ஒரு மென்மையான நோக்கோடு ஜனாதிபதி அணுகியுள்ளார்.

# நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பமான சூழ்நிலை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

## மட்டு -அம்பாறை அரசியற்துறைப்பொறுப்பாளர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை, மக்கள் மத்தியில் அச்சநிலையை உருவாக்கியுள்ளது என, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் விசேட அதிரடிப்படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. அச்சந்திப்பினைத் தொடர்ந்து செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது - ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அனைத்து மக்கள் மத்தியிலும் குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளன. மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகள் தொடர்பான அச்சநிலை நீக்கப்படவேண்டும்.

அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வுகாணும் வகையில், ஜனாதிபதி நல்லதொரு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்பதே அனைவரது விருப்பமாகும். சிங்கள, தமிழ் மக்கள் அனைவருமே, சமாதானத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கை அற்று வருகின்றது. அவர்களின் கனவுகள் கலைந்துவிடாது பார்த்துக்கொள்ள வேண்டிய பாரிய கடப்பாட்டினையும் பொறுப்பினையும் ஜனாதிபதி கொண்டிருக்கின்றார். என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல் நோக்கு

இலங்கையில் மீண்டும் போர் வருமா? மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் வருமா?

இதுவே இன்று மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி. சட்டரீதியான சதிப்புரட்சிமூலம், சுமார் இரு வருடகாலம் மேற்கொள்ளப்பட்டு

இந்தியா வெளியிலிருந்து படிப்படியாக இதில் கவனம் செலுத்தி, யார் யார் மூலமோ தனது பிடியை இறுக்கத்தொடங்கியது.

ஜனாதிபதி சந்திரிகா - தானே நேரடியாக இந்தியாவுக்குச் சென்றார். பின்னர், தனது நம்பிக்கைக்குரியவர்



ளுக்குச் சென்று தயாரித்து, ரணில் அரசிடம் சமர்ப்பித்த இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை வரைபின் மீதே முதலில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும்.

இதற்கு முதல் - சந்திரிகா நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்றமுறையில், சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தப்போகிறாரா? ரணில் கேட்டுக் கொண்டபடி, சந்திரிகா சமாதானப் பேச்சைத் தொடர்ந்தால், மக்களால் தெரிவு செய்யப்பட்டு, இதுவரை சமாதானப் பேச்சை நடத்திய ரணில் அரசின் நிலையென்ன? நாடாளுமன்றத்தில் ரணில் அரசு வெறும் பொம்மையாக இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா?

**சந்திரிகா அம்மையார் சமாதானத்தை விரும்பவில்லை. ஆட்சி அதிகாரத்தையே அவர் விரும்புகிறார். அதுவும் ஒரு சர்வாதிகாரியாக அவருக்கு ஆசை. இதற்காக இந்தியாவையும் இழுத்துவிடப் பாடுபடுகின்றார்.**

விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்தை மீறப்போவதில்லை என்று உறுதியளித்துவிட்டு, தென்னிலங்கை அதிகாரப்போட்டிக்கு முடிவுகாணட்டும் என்று அமைதியாக இருக்கிறார்கள்.

புலிகள் அமைதியாக இருக்கும்போது, சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளாமல், இலங்

படைகள், உசார்நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருப்பதும்- இலங்கை மக்களை, அதுவும் கடந்த பல வருடங்களாக இலங்கைப் படைகளாலும், இடையில் இந்தியப் படைகளாலும் பல தொல்லைகளுக்கும், இழப்புக்களுக்கும் உள்ளான தமிழ் மக்கள் - குழப்பமடைந்ததுடன், அச்சமடைந்தும் உள்ளனர்.

இந்தியாவின் மௌனம்தான் மர்மமாக உள்ளது. இந்தியாதான் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது என்றோ, தனது தீர்மானம் என்ன என்றோ அது வெளிப்படையாகச் சொல்லவேண்டும்.

இந்தியா மீண்டும் இலங்கையின் தமிழர் தாயகத்தில் ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் இறங்கமாட்டாதென்றே மக்கள் நம்புகின்றனர்.

புக்கொண்டுள்ள உதவிகளை ஒழுங்கான முறையில் பயன்படுத்துவதறகாகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களுக்கு புனரமைப்பு ஏற்படுத்திக் கொடுத்தபின், நிலையான அரசாங்கத்துடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான, நிலையான சமாதானத்தைக் காண்பதற்குப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றே விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழர் தாயகத்தில் படைகளைக் குவித்து வைத்துக்கொண்டு, பிறந்த மண்ணிலேயே அகதிகளாக அல்லல்படும் மக்களுக்கு, புனர்வாழ்வளிப்பதைக்கூட, நாட்டைப் பிரிக்கப்பார்க்கிறார்கள் என்று கூச்சலிடும் ஜனாதிபதி - தமிழ் மக்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பார்?

இந்த ஜனாதிபதியின் அழைப்

# சந்திரிகாவின் அதிகார ஆசையும் இந்தியாவின் துணைதேடும் தந்திரமும்.

வந்த சமாதான முயற்சிகளுக்கு, ஜனாதிபதி சந்திரிகா சமாதிகட்டிவிட்டார்.

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று, பாதுகாப்பு அமைச்சைத் தனது பொறுப்பில் அதிரடியாக எடுத்துக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா - இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா பக்கபலமாக இருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தைமூலம் சமாதானத்தீர்வு காண்பதற்கு, சந்திரிகாவினாலும், விடுதலைப் புலிகளினாலும் அனுசரணையாளராக ஏற்றுக்கொள்ளப்பட்ட நோர்வே - சந்திரிகாவின் அதிரடி நடவடிக்கைகளைத் தொடர்ந்து, சமாதான முயற்சிகளிலிருந்து ஒதுங்கிக்கொண்டிருக்கிறது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு, இந்தியா முன்வரவேண்டிய தருணம் இது என்று, ஜனாதிபதி சந்திரிகாவின் அபிமானத்துக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார் என்று சொல்வதைவிட, இந்தியாவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் என்று சொல்வதே

### எஸ்-எம்-ஜி

பொருந்தும்.


சமாதானப் பேச்சுக்களில் இந்தியா அனுரசணையாளராக வருவதானால், போரில் சம்பந்தப்பட்ட இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இதை ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்தியாவில் இன்னமும் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட இயக்கமாகவே இருக்கிறது.

இலங்கையில் பேச்சுவார்த்தை மூலம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முதலில் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, இந்தியாவையும் இதில் சேர்த்துக்கொள்வதற்கு, விடுதலைப் புலிகளே முதலில் மிகுந்த ஆர்வம் காட்டினர். இந்தியாவிலேயே சமாதானப் பேச்சுக்களை நடத்தலாம் என்றும் கேட்டனர். இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போது, தலைவருடன் அடிக்கடி கலந்தாலோசனை செய்வதற்கு வசதியாக, உடல் நலம் பாதிக்கப்பட்ட புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் - இந்தியாவில் தங்கியிருக்கவாவது அனுமதியுங்கள் என்று விடுத்த கோரிக்கையைக்கூட, இந்தியா நிராகரித்தது.

இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தையில், தாம் எதுவிதபங்கும் வகிக்கப்போவதில்லை என்று இந்தியா தெரிவித்தது.

ஜப்பான் உட்பட, மேற்கு நாடுகள் - இப்பேச்சுவார்த்தைகளில் அக்கறை காட்டத்தொடங்கிய பின்னரே,

களை புதுடெல்கிக்கு அனுப்பினார். இந்தியாவிலிருந்தும் பலர் இங்கு வந்து சந்திரிகாவையும், கதிர்காமரையும் மற்றும் 'வேண்டியவர்'களை



யும் சந்தித்துச்சென்றனர். இறுதி நேரத்தில் இந்தியா - இவர்களில் அக்கறை இல்லாதமாதிரிக் காட்டிக் கொண்டது.

பிரதமர் ரணில் - பின்னர் அடிக்கடி இந்தியா சென்றார், பேச்சு நடத்தினார், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டார், மீண்டும் இந்தியா செல்வதற்கு ஆயத்தமானார்.

இடையில் ரணில் - அமெரிக்கா சென்றார். அவர் அங்கிருந்தபோது தான், ஜனாதிபதி சந்திரிகா - அதிரடியாக மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார்.

ஜனாதிபதியின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு, நாடாளுமன்றக் கூட்டத்தை இருவாரங்களுக்கு ஒத்தி வைத்ததுடன், அவசரகால நிலையைப் பிறப்பிக்கவும், படையினரை உஷார்படுத்திப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவும், தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தச் சட்டரீதியான திடீர் சதிப்புரட்சி நடவடிக்கைக்குப் பின்னணியில், மறைமுகமாக ஒரு சக்தி இருப்பதாக மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்தது.

இப்பொழுது ஜனாதிபதியின் கூற்றுக்களும், எதிர்க்கட்சித் தலைவரின் அழைப்பும் - சந்தேகத்தைத் தீர்ப்பதாக அமைந்து வருகிறது.

மகிந்த ராஜபக்ஷவின் கூற்றுப்படி, இந்தியா - இனப்பிரச்சினையின் சமாதான நடவடிக்கைகளுக்கு அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு ஒப்புக்கொள்கிறதென்று வைத்துக் கொண்டால், முதலில் இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும்.

இத்தடை நீக்கப்பட்ட பின், விடுதலைப் புலிகள் இந்தியாவை அனுசரணையாளராக ஏற்று, பேச்சுக்கு சம்மதிக்கவேண்டும்.

விடுதலைப்புலிகள் பல நாடுக

கையின் பாதுகாப்புக்கு இந்தியா உதவிக்கு வரும் என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியிருப்பதும், இலங்கை

நிலமையைப் பார்த்த இந்தியப்

இப்பொழுது இலங்கையில் தோன்றியிருப்பது இனப்பிரச்சினையுடன் தொடர்புடையது அல்ல. இனப்பிரச்சினையைக் காரணமாக வைத்து, இரு சிங்களத் தலைவர்களுக்கும் இடையில் ஆட்சி அதிகாரப் போட்டியில் - நீயா? நானா? என்ற சவாலே ஆகும்.

ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட சர்வாதிகாரப் போக்கிலான சதிப்புரட்சி நடவடிக்கைக்கு, சமாளிப்புச் சொல்லும் விதமாக இப்போது நல்லிணக்க ஆட்சி அல்லது தேசிய அரசு என்று ஒரு நாடகம் ஆடுகிறார்.

அதிகார மோகத்தை கைவிட்டு, சகல கட்சிகளும் இத் தேசிய அரசில் சேரவேண்டும் என்று அழைப்பு வடுக்கிறார். விடுதலைப் புலிகள் சமர்பபித்த தன்னாதிக்க அதிகார திட்டவரைபு - போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு புனர்வாழ்வும், புனரமைப்பு வழங்குவதற்கு வெளிநாடுகள் வழங்க ஒப்

பையேற்று, அவர் அமைக்கவிரும்பும் தேசிய அரசுக்கு எப்படித் தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் ஆதரவு கொடுப்பர்.

ஜனாதிபதி சந்திரிகா சமாதானத்தை விரும்பவில்லை. ஆட்சி அதிகாரத்தையே அவர் விரும்புகிறார். அதுவும் ஒரு சர்வாதிகாரியாக அவருக்கு ஆசை. இதற்காக இந்தியாவையும் இழுத்துவிடப் பாடுபடுகிறார்?

தனது அதிகார ஆசைக்காக நாட்டில் மீண்டும் ஒரு போரைத் தொடங்குவதற்கு, சந்திரிகா முயற்சிக்கிறார். இது அவருக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே அழிவைக் கொண்டுவரும்.

போர்ச்சிந்தனையை விடுத்து, நாட்டு மக்களின் தீர்ப்பைக்கேட்டு, பொதுத்தேர்தலுக்குச் செல்வதே விவேகமாகும். இதில் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு விருப்பமில்லாவிடினும், இதுவே இப்போதுள்ள நெருக்கடி தீர ஒரேவழியாகும்.

# சமாதானச் சூழல் தென்னிலங்கை அரசியலின் நாகரிகமின்மையால் கேள்விக்குறியாகியுள்ளது

## வவுனியா மாவட்ட கல்விச் சமூகம் அறிக்கை

(வவுனியா)

இலங்கைத்தீவில் இதுவரை காலமும் இடம்பெற்று வந்த கொடிய போர் - நிறுத்தப்பட்டு, சமாதானம் நிலவிவரும் இச்சூழல், தென்னிலங்கையின் அரசியல் நாகரிகம் இன்மையால் கேள்விக் குறியாகியுள்ளது.

இது தமிழ்பேசும் மக்களிடம் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.இவ்வாறு வவுனியா மாவட்ட கல்விச் சமூகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து, வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிங்கள அரசுத்தலைமைகள்- இலங்கையில் அமைதி நிலவவேண்டும் என்ற எண்ணம் கொண்டனவல்ல. தமது அரசியல் இலாபம்கருதி, சமாதானம் என்ற சொல்லை வைத்து, அசிங்கப்படுத்தும் வேலைகளியே காலம் காலமாக ஈடுபட்டு வந்துள்ளன.

இன்றைய சூழ்நிலை, அனைத்து மக்களுக்கும் ஒரு மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. யுத்தம் மீண்டும் ஏற்பட்டு விடுமா எனும் ஏக்கம் -

எலலோரிடமும் காணப்படுகின்ற இந்த நிலையில், வவுனியா மாவட்ட இராணுவத்தினரின் செயற்பாடுகள் - சமாதானச் சூழ்நிலையினை மேலும் சந்தேகமாக்குவனவாக உள்ளன.

அண்மையில் இராணுவத்தினர் வவுனியா மாவட்ட கல்வி நிர்வாகத்துறையினரை அழைத்து, காமினி மகா வித்தியாலய மண்டபத்தில் நடத்திய கூட்டம், மிகுந்த குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில், இராணுவத்தினர் இவ்வாறு செயற்படுவது - தமிழ் பேசும் மக்களுக்கு, அரசியல் ஜனநாயக உரிமையினை மறுக்கும் ஒரு பாரதூரமான செயலாகும்.

மாணவர்கள் ஈடுபடும் வேண்டப்படாத விடயங்கள் என, இராணுவம் கூறும் விடயங்கள் அனைத்தும், தமிழ்பேசும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையாகும்.

தமிழ் மாணவர்கள் ஒன்று சேர்ந்து, தமிழினம் இனிமேல் இன அழிப்புக்கு உட்படுத்தப்படக்கூடாது, இலங்கை தமிழர்களின் தாயகம், பூர்வீகஉரிமை, வாழ்வு என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறுவதும், அந்த விடயங்களுக்காக ஒன்றுகூடிச் செயற்படுவதும் ஒரு வேண்டப்படாத விடயமாக இலங்கை

இராணுவம் சுட்டிக்காட்டுவதன் பின்னணி மிகவும் பயங்கரமானதாகும்.

மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டு, பிரச்சினைகளை உருவாக்குவதில் அக்கறைகாட்டின், இராணுவம் அதனைத் தடைசெய்ய முன்வரலாம். தமிழ் இனத்தின் ஜனநாயக உரிமைக்காக அமைதி வழியில் கூடும் மாணவர்களை, குற்றவாளிகளாக இராணுவம் இனங்காண்பது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனத்திற்கு முரணானது. எனவே, இராணுவத்தினரின் இவ்வாறான செயல்கள் - இலங்கையின் சமாதானச் சூழலினை மேலும் மேலும் சந்தேகத்திற்கு உள்ளாக்கும் செயலாகும்.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்வையும், யுத்தநிறுத்த உடனபடிக்கையினையும் குழப்பும் எந்தவொரு நடவடிக்கையிலும், இராணுவத்தினரை ஈடுபடவேண்டாம் எனக் கேட்டுக்கொள்வதுடன், இந்த விடயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சர்வதேச மனிதாபிமான நிறுவனங்கள் போன்ற அனைவரையும் அக்கறை காண்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்க இராணுவ நடவடிக்கை ஈராக்கில் தொடர்ந்து நடக்கிறது!



(பக்தாத்)

சதாம் ஹுசைனின் நகரான திக்ரித்தில் பயங்கரவாத நிலைகள் மீது குண்டு வீச்சுக்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும்- இந்தத் தாக்குதல்களை கூட்டுப் படையினர் கவச வாகனங்களின் உதவியுடன் நடத்தி வருவதாகவும், ஹெலிகொப்ரர்களும் தாக்குதல்களில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் 17 துருப்பினர்களுடன் இரண்டு அமெரிக்க ஹெலிகள் தாக்குதலுக்குள்ளாகி அதில் சென்றவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். இதன்பின்னரே தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முதல் முறையாக செயற்கைக்கோளின் வழிநடத்தலுடன், ஏவுகணைத் தாக்குதல்கள் 'கொர்குக்' பகுதியில் அமைந்துள்ள கெரில்லாக்களின் முகாம்களின் மீது நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் இறுதிக் காலம் நெருங்கிவிட்டதாம்!

### சதாம் ஹூசைன் ஒளி நாடாமூலம் தெரிவிப்பு



ஈராக்கிய அதிபர் சதாம் போன்று தோற்றமளிக்கும் ஒருவரினால் பதிவுசெய்யப்பட்ட ஒளிநாடா ஒன்றில் ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகளின் மரணம் நெருங்கிவிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் அமெரிக்கர்களுக்கு எதிராக போரை தீவிரப்படுத்துமாறு ஈராக்கியர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட செய்திகள் துபாயிலிருந்து செயற்படும் அல்ஜசீரா அராபிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது.

கடந்த செப்ரெம்பரில் ஒலிநாடா ஒன்றுசதாமினால் அனுப்பப்பட்டிருந்த பின்னர் அனுப்பப்பட்ட நாடாக்கள் சதாம் போல் தோற்றம் கொண்ட ஒருவரைக்கொண்டு பதியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் புஷ் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோர் பொய் பேசுவார்கள் எனவும் அமெரிக்காவின் வெள்ளை மாளிகை ஒரு கறுப்பு மாளிகை எனவும் ஒளிநாடாவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## பிரான்ஸ் கப்பல் குயின் மேரியின் ஏணிப் படி உடைந்து 13 பேர் பலி!



பிரான்ஸில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் தனது பயணத்தை மேற்கொள்வதற்கு தயார் நிலையிலிருந்த குயின் மேரி 2 என்ற கப்பலின் மேல் தளத்திக்கு செல்வதற்கு என தயாரிக்கப்பட்டிருந்த ஏணிப் படி உடைந்து 13 பேர்வரை கொல்லப்பட்டனர். குழந்தைகள் உட்பட 32 பேர்வரை காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இச்சம்பவம் சனிக்கிழமை செயின்ட ஒசரி என்ற துறைமுகத்தில் நடைபெற்றுள்ளது.

இக்கப்பல் கடல் பிரயாணத்தை மேற்கொள்ளவிருந்த நிலையில் கப்பலைப் பார்வையிடுவதற்கு கப்பல் கட்டுமான பணியாளர்களின் குடும்பத்தினரை அனுமதித்திருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இக்கப்பல் பிரித்தானியாவின் குனாட் என்ற உல்லாசப் பிரயாணக் கப்பல் கொம்பனிக்காக கட்டப்பட்டிருந்தது. இதுவரை கட்டப்பட்ட கப்பல்களின் மிகப்பெரியது இது எனவும், 32 தொடர் மாடிக்கட்டடத்தின் உயரத்தையும் 345 மீற்றர் நீளத்தையும் இக் கப்பல் கொண்டிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2004 ஜனவரி 8 ஆம் திகதி பிரித்தானிய இளவரசியினால் இக்கப்பல் வெள்ளோட்டம் விடப்படவிருந்தது குறிப்பிடத்தக்கது.

## உலகின் மிகவும் உயர்ந்த பாலம் பிரான்ஸில் அமைக்கப்படுகிறது!




உலகில் மிகவும் உயரமான பாலமொன்று பிரான்ஸிலுள்ள ரான் ஆற்றுக்கு மேலாக கட்டப்பட்டு வருகிறது. இதன்கட்டுமானப் பணியில் 500 இற்கு மேற்பட்ட வேலையாட்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இப்பாலத்தின் நடுவில் அமைந்துள்ள தூண்கள் 1115 அடி உயரமுடையது. 2005 ஆம் ஆண்டு இதன் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு இப்பாலத்தை வடிவமைத்த உலகின் தலைசிறந்த கட்டடக் கலைஞர் ரோமன் போஸ்டர் திட்டமிட்டுள்ளார்.

இபேச் எனப்படும் நிறுவனமே இந்தப் பாலம் கட்டும் பொறுப்பை ஏற்றுள்ளது. உலகின் புகழ்பெற்ற ஈபிள் கோபுரத்தையும் இந்த நிறுவனமே கட்டியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் கொன்கோட், சனல் ரனல் எனப்படும் நீருக்கடியிலான சேவைகள் பிரான்சிற்கும், பிரித்தானியாவுக்கும் இணைப்பை ஏற்படுத்தியது போன்று, தற்போது இந்தப் பாலமும் பிரித்தானியாவுக்கான நெடுஞ்சாலை இணைப்பொன்றை ஏற்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புஷ்ஷின் வருகையை முன்னிட்டு பிரிட்டனில் பாதுகாப்பு அதிகரிப்பு!




பிரித்தானியாவுக்கு விஜயம் செய்யவுள்ள அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் வருகையை முன்னிட்டு அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பிரான்சில் இருந்து யூரோ ஸ்ரார் மூலம் பிரித்தானியாவுக்கு செல்பவர்களை பலமான சோதனைக்குட்படுத்த பிரித்தானியப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் வியாழக்கிழமை போரை நிறுத்து என்ற தலைப்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளவர்களின் பாதை ஒழுங்குகளை பொலிஸார் அறிந்துகொள்ளவும் திட்டமிட்டுள்ளனர். புஷ் இங்கிலாந்துக்கு விஜயம் செய்யும்போது, அவரின் பாதுகாப்புக்கென 100 இற்கு மேற்பட்ட அமெரிக்க பாதுகாவலர்களும் வருவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

## உலக நோக்கு

## ஆப்கானில் ஐ.நா.அதிகாரி கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறார் ஹமீட் ஹர்சாய்

ஆப்கானிஸ்தான் தென்கிழக்கு மாகாணமான காஷ்னியில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரஞ்சு பணியாளர் 'பெற்றினா கொஸ்லாட்டின்' கொலைசெய்யப்பட்டமையை - ஆப்கான் ஜனாதிபதி ஹமிட் ஹர்சாய் வன்மையாக கண்டித்துள்ளார்.

29 வயதுடைய கொஸ்லாட் - ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பில் பணியாற்றிவந்தார். இவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரினால் கடைவீதியொன்றில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பல மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் மார்ச் மாதத்தில் இருந்து கொல்லப்பட்டு வந்துள்ளார்கள். ஆனால், வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஐக்கிய நாடுகள் சபை ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் தமது பணியாளர்களை தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேற வேண்டாம் எனக் கேட்டுள்ளது.

**சுவாமி விவேகானந்தர் ஜயந்தி தினத்தை ஒட்டிய ஆன்மீக எழுச்சி வாரம்**



**கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்-2004**

1) கீழ்ப்பிரிவு :- தரம் 6 முதல் தரம் 8 வரை.
2) மத்தியபிரிவு :- தரம் 9 முதல் 11 வரை.
3) மேற்பிரிவு :- உயர்தரம்

சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை பாடசாலை அதிபரின் சிபார்சுடன் கடித மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சேர்ப்பிக்கவும்.

*அனுப்பவேண்டிய முகவரி:-*

செயலாளர், சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றம்,
86, பொற்பதி வீதி, கொக்குவில்.

❑ விண்ணப்ப முடிவுத் திகதி:- 25.11.2003
❑ பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(528) சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றம்.

**சண்முகம் சைவ உணவகம்**
இல.10, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

## ஊர்சுற்றி எழுதுவது

அதிகார மோகத்தை விடுத்து தேசிய நல்லிணக்க அரசு அமைக்க கட்சி வேறுபாடுகள் இல்லாமல் எல்லோரும் ஒத்துழைக்க முன்வரவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வேண்டுகோள் விடுத்திருக்கின்றாரே பார்த்தீரா? என்று நண்பர் கேட்டார்.

நான் பதில் சொல்வதற்கு முன்னரே மூக்கை நுழைத்த எதிர்வீட்டுக்காரர் அதிகாரமோகம் பற்றி ஜனாதிபதி அட்வைஸ் சொல்லிறதுதான் வேடிக்கை. யார் யாருக்கு எதையெதை எப்பெப்ப சொல்லுறது என்ற விவஸ்தையே இல்லாமல்போயிட்டுது என்றார்.

'தேசிய நல்லிணக்க அரசு அமைப்பதற்காகத்தான் இப்ப எம்.பிக்களைத் தனித்தனியாக ஜனாதிபதி அழைத்துப் பேசுகிறாராக்கும்' என்றார் நண்பர்.

ஜனாதிபதி தனித்தனியாக அழைத்தால் போய் சந்திக்கக்கூடாது என்றும், முஸ்லிம் காங்கிரசை அழைத்தால் அவரைப் போய் சந்திப்பதற்கென்று தனியாக ஒரு குழுவை முஸ்லிம் காங்கிரஸ் நியமித்திருக்கிறதாமே என்றார் எதிர் வீட்டுக்காரர்.

எதுக்காக இவர்களை எல்லாம் அழைக்கிறார் தெரியுமா? இன்னமும் ரணில் ஆட்சியைக் கவிழ்த்து புதிய ஆட்சியை அமைக்கும் முயற்சியை அவர் கைவிடவில்லை என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது என்று நண்பர் சொன்னார்.

ஜனாதிபதி தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது என்பது பற்றி ஆலோசிக்கவோ, வேறு பிரச்சினைகள் பற்றி ஆலோசிக்கவோ தமிழ்த்தேசிய கூட்டமைப்பைக் கூப்பிட்டால் அவர்கள் போகமாட்டார்கள் என்றார் எதிர் வீட்டுக்காரர்.

எங்கள் பிரச்சினையில் விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை அமைப்பதற்கான திட்டவரைபைக் கொடுத்ததும்தானே ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்று, நாடாளுமன்றக் கூட்டத்தையும் ஒத்திவைத்து, அவசரகால நிலையையும் கொண்டுவர நடவடிக்கை எடுத்தார். இனி எதற்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு? என்ன பேசுறது?

இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா பக்கபலமாக இருக்கிறது என்றும் அம்மா சொல்லியிருக்கிறா.

அது எப்போதுமே இலங்கைக்கு பக்கபலமாகத்தான் இருக்கும். இப்போதுதான் விடுதலைப் புலிகள் அமைதியாக தென்னிலங்கையில் நடக்கும் அதிகாரப் போட்டிகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்களே. பிறகு எதற்கு இந்தியாவின் பாதுகாப்புப் பற்றி அம்மா பேசுகிறா?

இந்தியாவின் பக்கபலம் இருக்கும்போது நாட்டுக்குப் பாதுகாப்பில்லை என்று எதற்காகப் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுத்தா?

அம்மா அதை எடுத்த பின்னர்தான் இந்தியா பக்க பலமாய் இருக்கிறதோ?

அம்மா தேசிய நல்லிணக்க அரசு அமைக்க அழைப்பு விடுத்திருப்பதைப் பார்த்து ஏ.எச்.எம்.பௌஸி சிரித்துக்கொண்டிருக்கிறார் என்று ஒரு ஆங்கில வாரப் பத்திரிகை கிண்டலாகச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தத் தேசிய நல்லிணக்க அரசு அமைக்கவேண்டும் என்று ஏ.எச்.எம்.பௌஸிதான் பல மாதங்களுக்கு முன் பகிரங்கமாகவே யோசனை சொன்னார். இதைக் கேட்டதும் அம்மாவுக்குக் கடும்கோபம் வந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலரும் அம்மாவுக்கு உசார் கொடுத்து பௌஸி மீது நடவடிக்கை எடுக்கும்படி தூண்டினர். பௌஸி கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இப்பொழுது அதே தேசிய நல்லிணக்க அரசு அமைக்க எல்லோருக்கும் அம்மாவே அழைப்புவிடுவதைப் பார்த்தால் பௌஸிக்கு சிரிப்பு வராமல் வேறு என்ன வரும்?

மூன்று முக்கிய அமைச்சுக்களையும் பொறுப்பேற்று எடுத்த அதிரடி நடவடிக்கையால், ரணில் அரசைக் கவிழ்த்து புதிய ஆட்சி அமைக்கமுடியும் என்று அம்மா நினைத்தார். அது நடைபெறாதது மட்டுமன்றி, தமது திட்டங்கள் எதுவும் உருப்பெறாததால் தேசிய நல்லிணக்க அரசு என்று பம்மாத்துக் காட்டுகிறார், அவ்வளவுதான் என்றார் நண்பர்.

திடீர்த் தேர்தல் வருமா? இப்போது தேர்தல் வந்தால் இரத்தக்களறிதான் ஏற்படும் என்று பவரல் என்ற சுதந்திரமான நீதியான தேர்தல் நடைபெற வேண்டும் என விரும்பும் அமைப்பு எச்சிரிக்கிறது என்கிறார், எதிர் வீட்டுக்காரர்.

தேரதல் வந்தால்போல தமிழ்மக்களின் உரிமைகள் கிடைத்துவிடுமா? இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமைக்க முன்வந்து நிற்பார்களா?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ்.சிறையிலுள்ள இளைஞனின் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்க நீதிமன்றம் உத்தரவு!

கடந்த இரண்டு மாதகாலத்துக்கு மேலாக, யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வன்னிப் பகுதி இளைஞர் ஒருவர் தொடர்பாக, அவரது பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்க சாவகச்சேரி நீதவான் உத்தரவிட்டார்.

நாகர்கோவில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள 10 ஆவது சிங்க றெஜிமென்ட் படைத்தளத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்ததாகச் குற்றஞ்சாட்டப்பட்டு, இந்த இளைஞர் கடந்த ஆகஸ்ட் மாதம் இறுதிப்பகுதியில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கிளிநொச்சி தர்மபுரத்தைச் சேர்ந்த மகாலிங்கம் இரத்தினராஜன் (வயது 30) இளைஞனே கைதுசெய்யப்பட்டவராவார்.

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த சுண்டிக்குளம் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த குறித்த இளைஞன் வழிதவறி நாகர் கோவல் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் சென்ற வேளையிலேயே படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் கொடிகாமம் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட நிலையில், சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, யாழ். சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இவரின் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இது குறித்த தகவல்களை அவரது பெற்றோரிடம் தெரிவிக்குமாறு, நீதிமன்றால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்.அலுவலகம் நிராகரித்துள்ளது.

இதையடுத்தே, இந்த இளைஞனது நிலை தொடர்பாக, அவனது பெற்றோருக்கு அறிவிக்குமாறு, நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார். (202)

## நாற்சந்தி

'இனிமேல்பேப்பர் பார்க்கக்கூடாது!'

'ஏன் என்ன நடந்தது.... ஏதாவது அபசகுனமாய் வாரபலன் வந்துட்டுதோ?'

அப்பிடி எதுவுமில்லை.... சும்மா கன்னாபின்னா என்று ஆக்களுக்கு பேதியூட்டுவது மாதிரியெல்லே செய்தியெல்லாம் வருகுது....

'பேதியா பீதியா சரியாச் சொல்லு....'

'இரண்டுந்தான் பேதியெண்டா வயித்தாலை போகும்'

பீதியெண்டா வயித்தால அடிக்கும்....

அப்ப உனக்கு இப்ப இரண்டும் நடக்குதோ....?

உனக்கு எல்லாம் பகிடி.... இண்டைக்கு பேப்பர்களைப் பார்த்தனியே....

இல்லை. இனித்தான்.... இன்னும் சலூன் திறக்கேல....

அது தானே எங்கடை வாசிகசாலை....!

'பாரன் பிறகு நீயும் இதைத்தான் சொல்லுவாய்....!

'ஏன் என்னென்று விஷயத்தைச் சொல்லேன்... !

சந்திரிகாவின்ர ஆக்கள்....அதுதான் ராஜபக்ஷ இந்தியாவை வந்து சமாதானத்தை பொறுப்பேற்கச் சொல்லி கூப்பிட்டிருக்கிறார்.

அவையின்ர இராணுவமும் உஷார் நிலையில இருக்காம்....

இனிச் சண்டை வந்தால் இந்தியா பாதுகாக்குமாம் என்று சந்திரிகாகூடச் சொல்லியிருக்கிறாவாம்....!

உதெல்லாத்தையும் கேட்க நீ சொன்ன மாதிரி பேதியும் பீதியும் கலந்துதான் வரும்.

'அதெல்லாம் வருமோ இல்லையோ இந்தியா வருமே....?'

முந்தி 'ஜே.ஆர். ஐயா' அழைச்சுப்பட்ட அனுபவம் நினைவிருந்தா அம்மா அழைச்சுவர யோசிக்காயினம்.... ஐயா பொறியில் தள்ளினார்.... அம்மா புதை மணலுக்கை தள்ளப்பார்க்கிறா இந்தியாவை....

இப்ப ரணில் ஐயா அமெரிக்கா பக்கமல்லோ நிக்கிறார்....

ஆர் எந்தப் பக்கமும் நிக்கட்டும் ஆனால் எங்கட பக்கம் சொறியாமல் இருந்தால் சரி....

சந்தியில் இருவர் - புதியவர்கள் கதைத்துக்கொண்டிக்க அங்கு வந்த மணியத்தார் சொன்னார் இனி அமெரிக்காவும், இந்தியாவும் தான் சமாதானக் கயிற்றை இழுக்கப்போயினம்போல....

-தெருவாசி

# அலங்கார வளைவை புனரமைக்க சாவகச்சேரியில் படையினர் தடை!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் தின நிகழ்வுகளை முன்னிட்டு சாவகச்சேரி நகரப்பகுதியில் அலங்கார வளைவு புனரமைக்க மேற்கொண்ட முயற்சி நேற்று முன்தினம் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

சாவகச்சேரி நகரின் மையப் பகுதியில், கண்டிவீதி மற்றும் கச்சாய் வீதி சந்தியில் அமைந்துள்ள அலங்காரவளைவுப் பந்தலை மீள் புனரமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியே தடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையால் நிறுவப்பட்டிருந்த இந்த அலங்கார வளைவு, 2000ம் ஆண்டின் முற்பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது அழிவுக்குள்ளாகியிருந்தது.

இந்நிலையில் மாவீரர் தினத்தை முன்னிட்டு குறித்த அலங்கார வளைவை மீள்புனரமைப்பு செய்ய மாவீரர் தின ஏற்பாட்டுக்குழுவினர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

நேற்று முன்தினம் கட்டிட நிர்மாணப்பணிகளை மேற்கொள்ள வந்த தொழிலாளர்களே படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியஇராணுவம்...

தெரிவுகள் பல வழிகளில் இருந்தபோதும், அவற்றில் இராணுவத் தலையீடும் ஒன்றாகும்.

பிரேமதாஸ காலப்பகுதியில் இந்திய இராணுவத்தை முதுகில் குத்தியது மாதிரியல்லாமல், அவர்களின் ஆதரவுடன் கொழும்பில் நிரந்தரமான இராணுவத்தளம் ஒன்றை அமைக்கவேண்டுமெனவும் அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

இந்திய மாநிலங்களின் சமஷ்டி முறையிலான அரசமைப்பின் அலகு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அறிவிக்க வேண்டும்.

அதிகார பரவலாக்கலே பிரச்சினைக்கு அடிப்படைத்தீர்வாகும். இதுவே ஜனநாயக ரீதியாகச் செயற்படும் தமிழர்களுக்குத் தீர்வாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்சித் தலைவர்களுடன் ரணில் இன்று சந்திப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளார்.

நாட்டில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது, மற்றும் அதன் எதிர்காலம் பற்றியும் தேசிய நல்லிணக்க அரசாங்கம் சம்பந்தமாகவும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஜே.வி.பியுடன்....

தலைமைப்பீடங்களுக்கும் தான் அழுத்தம் கொடுக்கவுள்ளதாகவும், ஜே.வி.பி.யினர் இல்லாமல் அரசியல் அரங்கில் எதுவும் நடை பெறாதெனவும் அவர் தெரிவித்தார்.

அநுரா பண்டாரநாயக்கவின் மேற்படி தீர்மானங்களை எதிர்த்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் மூத்த உறுப்பினர் ஒருவர் - தனி மனிதன் ஒருவன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஆதரவு தெரிவிப்பதிலும் பார்க்க, கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நடந்து கொள்வது சாலச்சிறந்தது எனத் தெரிவித்தார்.

பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஒருவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், அநுரா பண்டாரநாயக்கவின் கட்சியிலிருந்து விலகும் முடிவை தங்கள் கட்சியின் சார்பில் வரவேற்பதாகத் தெரிவித்தார்.

# நேற்று நள்ளிரவுவரை நீடித்த சுதந்திரக் கட்சியின் கூட்டம்!

### ஜே.வி.பி.யுடனான கூட்டணி குறித்து முக்கிய விவாதம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டக் கூட்டமொன்று நேற்றிரவு ஜனாதிபதி மாளிகையில் நடந்தது.

பொதுக்குழுவில் அங்கம் வகிக்கும் எழுபது உறுப்பினர்களும் சமுகமளித்த இந்தக் கூட்டம் -நேற்றிரவு 8 மணிக்கு ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தில் -ஜே.வி.பியுடனான கூட்டுத் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும், எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அந்தக் கட்சியுடன் கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவது குறித்து, தீவிரமாக ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது. இதே வேளை, ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, தமது ஆதரவுக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர். அத்துடன், ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்தபின் ஏற்படும் ஆட்சியில் தமக்கு எந்தவித பதவிகளும் தேவையில்லை எனவும், ஜே.வி.பியுடனான கூட்டணிக்காக தமது பதவிகளைத் தாம் துறக்கவும் தயாரெனவும் இவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பியுடனான கூட்டணி அமைப்பதில் - அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மும்முரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு 8 மணிக்கு ஆரம்பமான இந்தக் கூட்டம் - நள்ளிரவு வரை தொடர்ந்து நடந்ததனால், மேலதிக விபரம் எதுவும் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரையில் வெளிவரவில்லை. (01)

## சமாதானப்....

யானது நாட்டின் இறைமைக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியதாக உள்ளது. சமாதான முயற்சிமூலம் படையினர் அவமானப்படுத்தப் படுகின்றனர்.

இந்த நாட்டின் எல்லைப் பிரதேசங்களை அவர்கள் தமது உயிரைக் கொடுத்துப்பாதுகாத்து வருகின்றனர்.

தேசிய அரசு ஒன்றை அமைப்பதன்மூலம் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதுடன் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தவாறு, தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்க்கமுடியுமெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## நோர்வே சமாதானத்....

அமைதி முயற்சியில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு இருக்கிறது.

இலங்கையின் சமாதான வழிமுறையில் இந்தியாவுக்கு மிக முக்கிய பங்கு இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், எப்படிச் செயற்படவேண்டும் என்பது பற்றி இந்தியாவுக்குத்தான் நன்கு தெரியும். அதை வெளிப்படையாகச் சொல்லத்தேவையில்லை. நோர்வே வெகுதூரத்திலுள்ள ஒரு சிறியநாடு.

இந்தியா என்ன செய்யவேண்டுமென்று நாங்கள் சொல்லவேண்டியதில்லை. இலங்கை அமைதி வழிமுறைக்கு, தொடக்கத்திலிருந்து இந்தியா தனது முழு ஆதரவை அளித்து வந்திருக்கிறது. அதற்கு நாங்கள் நன்றி சொல்லுகின்றோம் என்றும் அவர் தனது செவ்வியில் மேலும் குறிப்பிட்டார்.

## சமாதான முயற்சி...

தொடர்ந்தும் தம்வசம் இல்லாமையால் - விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு அதிகாரம் இல்லாமையால் - சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்ற நோர்வே அரசு தமது பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. இதனால் சமாதான முயற்சி பாதிப்படைந்துள்ளது. சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டுமென்ற அடிப்படையிலேயே ஜப்பான் மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் இலங்கைக்கு நிதிஉதவி வழங்க இணக்கம் தெரிவித்தன.

எனினும், தற்போதைய நிலையில் சமாதான நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளது. இதனால் நிதியுதவி கிடைக்காமல் போகலாம். தேசிய நல்லிணக்க அரசாங்கம் அமைப்பதற்கான ஜனாதிபதியின் அழைப்பில் தெளிவில்லை. தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முன்னர், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை யார் ஏற்பது என்று தீர்மானம் எடுக்கப்படவேண்டுமென்றும் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

யாழ் நகரில் 24 மணி நேர சேவையில்

சூல் லெமனேற்றிங்

உங்கள் தேவைக் கேற்ப அளவு முறையிலும், குறைந்த கட்டணத்திலும், தரமான முறையிலும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

மதி கலர்ஸ் ஸ்கிறீன் அன் ஒவ் (f) செற் பிறிண்டர்ஸ்

B,15/2, முருகேசர் லேன், நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பேசி. 071-2346615

B440, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பேசி. 071-2382644

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்

தரம் 6 இற்கான அனுமதி - 2004

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 31.11.2003

வி.மாணிக்கம் அதிபர்

(சி-1807)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணிய கத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விபரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.89 | 97.00 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 161.76 | 164.38 |
| 1 யூரோ | 112.84 | 114.90 |
| 1 சுவிஸ் பிராங் | 72.04 | 73.80 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 68.23 | 69.93 |
| 1 ஜப்பானிய யென் | 00.74 | 00.89 |
| 1 சவூதி றியால் | 25.49 | 25.49 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.